சுன்னுகம், மன்மத ஐப்பசி ௨௦ ✱ (6 – 11 – 55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI – NATIONALIST TAMIL WEEKLY

மலர் 26 இதழ் 18 | தேசிய வார வெளியீடு ○ கிறுவியவர் : நா. பொன்னையா | தனிப் பிரதி சதம் 10

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்
விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

★ இன்றுள்ள நிலைமையிலே ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒரு மொழிக்கொள்கையையுடைய தமிழ் ஒதுக்கிகளாக இருப்பதாகக் கருதப்படுவதால், ஈழநாட்டிலே தமிழின் எதிர்காலம் என்னவாகும் என்ற கவலே சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

# மொழிச்சிக்கல் மூட்டியுள்ள கனல்

## யு. என். பி. மொழிக் கொள்கைமீது சந்தேகம்

## ஒத்துழைப்புத் தமிழ்ப் பிரதிநிதிகளின் பெருங் கவலே




கொழும்பு, 2-11-55

தாய்மொழியே உயிர் என எண்ணிப்போலும் சென்ற சில வாரங்களாக இங்கு கொதிப்பையும், கொந்தளிப்பையும், சீற்றத்தையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணிய மொழிச்சிக்கல் மூட்டிவிட்ட கனல் இன்னும் அடங்கியபாடில்லை. உள்மனதில் யு. என். பி. ஒரு மொழிக் கொள்கையை உடையதென நம்பி மனப்பால் குடித்து வந்த சிங்கள வகுப்புவாதிகள் சிலருக்கு யு. என். பியின் சமீபத்திய போக்குப் பலத்த சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது. பாராளுமன்றத்திலே முதலமைச்சர் நிகழ்த்திய உரை, யு. என். பியும் சிங்களத்தோடு தமிழையும் அரசகரும மொழியாக்கச் சம்மதிக்கிறதோ என்ற இவர்களது சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டது. எனவேதான் ஒரு மொழிக் கொள்கையை நெஞ்சார விரும்பும் இப்பேர்வழிகள், சிங்களப் பொதுமக்களிடையே இனப் பகையை ஊட்டி வளர்க்கும் வகையிலே பேசி அவர்களையும் தங்கள் 'பட்டாளத்திலே' சேர்க்கும் மகத்தான கைங்கரியத்திலே ஈடுபட்டு 'ஓடு தாவடிப்' பட்டுத் திரிகிறார்கள். நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இனப்பகையைக் கிண்டித் துவேஷ நெருப்பிலே நெய் பெய்யும் பேருரைகள் குறைவின்றி நடந்தவண்ணமிருக்கின்றன.

### பெருங் கவலே

ஐக்கிய தேசியக் கட்சியிலேயுள்ள ஒரு மொழிக் கொள்கைக்காரர்கள், கட்சியின் மொழிக் கொள்கையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமென்ற பேராவாக் கொண்டு முயற்சி செய்கிறார்கள். கட்சியின் செயற்குழுக் கூட்டமொன்றில், கட்சியின் மொழிக் கொள்கையை மாற்றி ஒரு மொழிக் கொள்கையாக ஆக்க வேண்டுமென்ற பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப் படவிருக்கிறது. இன்றுள்ள நிலைமையிலே ஐக்கியதேசியக் கட்சியிலுள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒரு மொழிக் கொள்கையையுடைய தமிழ் ஒதுக்கிகளாக இருப்பதாகக் கருதப்படுவதால், ஈழநாட்டிலே தமிழின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலே சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இக் கவலே, ஆட்சியாளரோடு இதுவரை ஒருமித்து, வாயடைத்துப் போயிருந்த ஒத்துழைப்புத் தமிழ்ப் பிரதிநிதிகளின் சிந்தனையையும் பற்றியிருக்கிற தென்பது தமிழ் மக்களுக்கு உற்சாகம் தருவதோர் செய்தியாகும். ஆழ்ந்த நெடுந் தூக்கத்தினின்றும் விழித்திருக்கும் இவர்கள், யு. என். பிக் கொள்கை மாற்றப் பிரேரணைக்குக் கொண்டுவர நினைக்கும் திருத்தங்கள் நிடுக்குறுத்தும் தீவிரப் பண்பு வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

### 'ஈழகேசரி'க் கட்டுரை

நாடு முழுவதும் இருமொழிச் சமத்துவம் நிலவவேண்டுமென்ற இவர்களது முதலாவது திருத்தம் கட்சிக் கூட்டத்திலே தோல்வியுறுமானல், இலங்கையைத் துண்டுபடுத்தும் தமிழ் நாட்டுக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பார்களாம், இன்றுள்ள ஒத்துழைப்புப் பிரதிநிதிகள்.

ஈழகேசரி 19-12-54 இதழில் வெளியான கட்டுரையிலுள்ள கருத்தும் இலங்கைப் படமும் ஒத்துழைப்புப் பிரதிநிதிகளுக்கு இப்போது உதித்திருப்பது, உண்மையிலேயே தமிழ்த்தனி நாட்டை உருவாக்கும் அந்தரங்க சுத்தியான ஆசையினலேதானு என்ற கேள்விக்கு எதிர்காலம்தான் விடையளிக்க வேண்டும்.

தமிழ் நாடு கோரித் துண்டித்துக் கொண்டு போய் விடுவதாகக் கூறினல் சிங்கள வகுப்புவாதிகள் பயந்து, மருண்டு, தமிழையும் அரசகரும மொழியாக அநுமதிப்பார்கள் என்ற நினைப்பே, ஒத்துழைப்புப் பிரதிநிதிகளின் தமிழ் நாட்டுக் கோரிக்கைக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவ்வகையாகப் 'பூச்சாண்டி' காட்டி மொழிக் கொள்கையைத் தீர்த்துக் கொள்ளுதல் முடியுமேயானல், அது ஒரு தற்காலிக நிவாரணமாகத்தான் இருக்க முடியுமெனத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமவர்கள் தெரிவித்திருப்பதும் இத்தருணத்தில் மனங்கொள்ளத்தக்கது.


### உல்லாச யாத்திரை

நாட்டிலே புகையும் பல்வேறு சிக்கல்களையும் அப்படியே விட்டுவிட்டு நிம்மதியாக உல்லாசப் பயணம் போயிருக்கிறார் முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல. உரோமாபுரி பற்றி எரிகையில் வாத்திய கீதமிசைத்துக்கொண்டிருந்த மன்னன் நீரோவை, நமது முதலமைச்சருக்கு உவமையாகத் திரு. டபிள்யூ. தகநாயக்கா அவர்கள் கூறியது எவ்வளவுதூரம் பொருந்துமென்பது எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

கடல்கடந்து சென்றபோதும் அங்கெல்லாம் நம் நாட்டை விளம்பரம் செய்கிறார் சேர் ஜோன் என்பது திருப்தியளிக்குமோர் செய்தியாகும். 'தேநீரைவிரும்பும் எவரையும் இலங்கை விரும்புகிறது' என்ற அவரது பொன்மொழிகள், ஈழநாட்டை அருமையாக விளம்பரம் செய்யக்கூடிய அற்புதமான கற்பனை ததும்பும் 'சுலோகம்' என்பதில் ஐயம் உண்டோ?

### மதுவிலக்கு விசாரணை

மதுவிலக்கைச்சட்டத்தால் விதிப்பதா வேண்டாமா? என்பதையிட்டு விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைச்சபை இந்திய நாட்டினைத் துருவி ஆராய முற்பட்டிருக்கிறது. பாரதநாட்டின் பல பாகங்களிலும் மதுவிலக்கு எவ்வகையான பலனை அளித்திருக்கிறது என்று ஆராய்ச்சி நடத்துவதற்காக, இந்திய நாடு முழுவதையும் ஒரு சுற்றுப் பயணத்தினலே 'அளந்து' விடுவது என்று திட்டமிட்டிருக்கின்றனர், இவ் விசாரணையாளர்கள்.



கொம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் சென்ற 23-10-55இல் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்துக்குத் திரு. எம். கார்த்திகேசன் தலைமைவகித்தார்.

# நீரினல் அழியாத் தமிழ் வெறுந்தாரினல் அழிபடுமா?

## பழம் பெருமை பேசிப் பயனில்லே

— திருமதி கங்கேஸ்வரி

கிழக்குத் தபால் : : ஊரி

மட்டக்களப்பு 2-11-55

சென்ற சில நாட்களாக இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பெயர்ப் பலகைகளிலே தமிழ் மொழி அழிக்கப்பட்டு வருவதாக அறிந்தோம். மட்டக்களப்புப் பகுதியிலும் ஓரிரவு இது நடந்திருந்தது. பின்னர், தமிழ் உணர்ச்சிமிக்க சிலர் போலும், அழிக்கப்பெருதிருந்த பலகைகளிலெல்லாம் சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் மட்டும் அழித்ததோடு, தமிழ்ப் பெயர் அழிக்கப்பட்டிருந்த பலகைகளிலே, அழிக்கப் படாதிருந்த சிங்களத்தையும் அழித்துப் புதிதாகத் தமிழ்ப் பெயரையும் பொறித்து வைத்துள்ளனர். பொதுமக்கள் இப் பெயரழிப்பு வேலையினுற் பெரிதும் ஆத்திரம் அடைந்துள்ளனர். ஆத்திரமுற்ற சிலர் தமிழ் அழிக்கப்பெற்ற பலகைகளைச் சில இடங்களில் உடைத்திருக்கிறார்கள். 'விளையாட்டு வினையாக முடியும்' என்ற முதுமொழிப் பலனை மக்கள் நோக்குவதாயும் தெரிகிறது. தாய்மொழி உணர்ச்சியானது இன வெறியாக மாறி இலங்கையை அழிவு செய்ய விடாமற் பார்ப்பது ஆட்சியாளரின் கடமை என்று சில தலைவர்கள் அரசாங்கத்தாருக்குக் கடிதங்கள் போட்டிருப்பதாயும் அறிகின்றோம்.

### தையற்கலேக் காட்சி

காரைதீவில் உள்ள இராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சாரதா பெண்கள் வித்தியாலயத்தில் 30-10-55இல் ஒரு தையல் கைப்பணிக் காட்சியும், பெற்றோர்தின விழாவும் நடந்தேறின. காலையில் இடம்பெற்ற கலைக்காட்சியினை மட்டக்களப்பு அரசினர் கல்லூரி விரிவுரையாளரான திருமதி கங்கேஸ்வரி கந்தையா அவர்கள் திறந்துவைத்தனர். அவர் தமது தலைமைப் பேருரையிலே வழியிடையிருக்கும் ஊர்ப் பெயர்ப் பலகைகளிலெல்லாம் தமிழ் அழிக்கப்பட்டிருந்ததலைக் குறிப்பிட்டுவிட்டு நீரினலும், நெருப்பினலும் அழியாத தமிழினைத் தாரினல் அழிக்க முற்பட்டுள்ளார்கள் என்று வருத்தத்தோடு கூறினர்கள். "நிகழ்காலத் தமிழர் தமது பழம் பெருமைகளைக் கூறிக் கொள்வதிலேயே கருத்தாயிருக்கின்றனர். ஆனல் காலம் இன்று நமது சொல்லளவை விடச் செயலளவினையே அதிகம் வேண்டி நிற்கின்றது. மொழியின் சிறப்புக்காக நாம் என்னென்ன செய்யப்போகின்றோம் என்பதைத் தமிழன்னையும் நோக்கிக்கொண்டிருக்கின்ருள்" என்று மேலும் அவர் குறிப்பிட்டனர். மாலையில் நடைபெற்ற இசை நடன நிகழ்ச்சிகளுக்குப் பகுதி வித்தியாதரிசி திருவாளர் எஸ். கனகசபை அவர்கள் தலைமை வகித்தார். நீண்டகால உறக்கத்தின் பின்னர் இப் பெண்கள் கலாசாலை பெற்ற நல்விழிப்பின் முதல் அறிகுறி இது

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க)

தமிழன்பர்கள் வாழும் இடங்கள் எல்லாம் சென்று மகிழ்வூட்டுவது ஈழகேசரியே

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# எல்லோரும் இலங்கையர் இலங்கை எங்கள் தாய்நாடு

எக். ஏ. மகாதேவா

சென்ற சில வாரங்களாக இலங்கையிலுள்ள ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகளைக் கிரமமாக வாசிக்கும் ஒவ்வொரு இலங்கைத் தமிழன மனத்திலும் "இனியெங்கே இலங்கைத் தமிழர்?" என்ற கேள்வியெழுந்திருக்கவேண்டும். அப்படி எழுந்திராவிட்டால் அவன் இலங்கைத் தமிழனாயிருக்க முடியாது.

இன்றைய கொள்கைப்படி தமிழர் இலங்கையின பூர்வீகக் குடிகளோ அல்லது மகாவம்சம் முதலிய நூல்கள் கொள்வதுபோல் தமிழர், சிங்களர் என்று சொலலப்படும் சாதியினர் வந்து குடியேறியபின் படையெடுத்து வந்து குடியேறியவர்களோ என்பது கேள்வியல்ல. இலங்கைத் தமிழர், தமிழர் மத்திரமல்ல அதற்கு மேலாக 'இலங்கையர்' எனபதையும் எவரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. இலங்கை எவ்வளவு சிஙகளருக்குத் தாய்நாடோ அவ்வளவு அது இலங்கைத் தமிழருக்கும தாய்நாடு. சிங்களர் எவ்வளவு தூரம் இலங்கையென்ற இத்தீவுக்கு அன்பும் மரியாதையும காட்டுகிறார்களோ அவ்வளவு தூரம் இலங்கைத் தமிழனும் காட்டுகிறான். இலஙகைக்காக சிங்களர் எவ்வளவாக இரத்தம் சிந்தத் தயாரகவுளரோ அதற்கு மேலாக இலங்கைத் தமிழரும் இரத்தம் சிந்தத் தயாராக இருக்கின்றனர். இலங்கை தமிழரின் தாய்நாடு! இங்கே சிங்களர் தமிழர் என்ற பாகுபாட்டிற்கு இடம் இல்லை. உண்மைத் தலைவர்கள் இலங்கையை இலஙகையர் வாழும் ஒரு நாடாகக் கருதினரேயன்றிச் சிங்களர், தமிழர், பறங்கியர், முஸ்லிம்கள் என்ற வெவ்வேறு தனிவகுப்பினர் வாழும நாடாகக் காணவில்லை.

சேர் ஜோன் கொத்தலாவல அவாகள் சமீபத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேசியதைக் கேளுங்கள்: "சிஙகளராகவும், தமிழராகவும், பறங்கியராகவும, முஸலீம்களாகவும் பௌத்தராகவும் இந்துக்களாகவும வாழ்வதைவிட: இவ்வித தியாசங்களை மறந்து எல்லோரையும் இலஙகையராகக் காணபது மிக மிக முக்கியமானதும அவசியமானதும் கூட" என்றார். இதுவேஉண்மையான தலைவாகள் காணும கனவு. இதுவே இலங்கையின் வருங்கால சுபீட்சத்திற்கு அடிகோலும் ஒரே ஒரு கொளகையுமாகும. அதைவிடுத்து, சிங்களர் சிங்களமே இலஙகையின் தேசிய மொழியாக இருக்கவேண்டும என்று கூக்குரல் இடுவதும, தமிழும் வேண்டாம் சிஙகளமும் வேண்டாம், ஆங்கிலமே அரசாங்க மொழியாகவிருக்க வேண்டுமென்று இன்னொரு சாரார் அலறுவதும, 'இலஙகையர்' என்னும் இந்தக் கொள்கைக்கு புறம்பானதாகும்.

சிங்களர் சிங்களமே இலங்கையின் தேசிய மொழியாகவும், மத்திய மொழியாகவும இருக்க வேண்டும் என்று கூக்குரலிடுகிறார்கள். இது சாதாரண மக்களின் கூக்குரல் அல்ல. அடுத்த பொதுத் தேர்தலின் மீது கண்ணாக விருக்கும் அரசியல் விஷமிகளின் கூக்குரல் ஆகும், என்பதை நாம மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கோரிக்கையிலும் ஓரளவு நியாயம் இருக்கிறதுதான். முன்கூறியதுபோல தமிழர்களோ, சிங்களர்களோ முதலில் குடியேறியவர்கள் என்பதல்ல கேள்வி. இன்று இலங்கைத் தமிழரை விடச் சிங்களரின் தொகை மூன்று பங்கு அதிகமாகும். சிங்கள மொழி தமிழைப்போல் பூரணம் அடைந்த மொழியன்று. இலங்கையைத்தவிர வேறு எங்குமே பேசப்படாத மொழி. அதனாலே தான் சிங்களர் தம் மொழி இலங்கையின் தேசிய மொழியாக அமையவேண்டுமெனக் கூக்குரலிடுகிறார்கள். இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. அதுபோலவே இலங்கைத் தமிழனும் தென்னிந்தியாவுடனோ, அல்லது மற்றுந் தமிழ் பேசும் தேசங்களுடனோ தொடர்பில்லாது இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ளவர்கள். தங்கள் மொழி புறக்கணிக்கப்படுவதைக் கண்டு, தமிழுக்குச் சம அந்தஸ்து வேண்டுமென்று கேட்பதோ அல்லது ஆங்கிலமே தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்று கேட்பதோ ஆச்சரியப்படத் தக்க விஷயமல்ல.

சுயநலவாதிகளும் பதவி வேட்கைக்காரர்களும் எதுவுங் கூறலாம். இந்த ஒரு சிக்கலை வைத்தே வெவ்வேறு விதமாகத் தத்தமக்கு இசைந்தபடி புரட்டி உருட்டலாம். ஆனால் விஷயம் ஒன்றுதான். இலங்கையை ஒருமக்கள் வாழும் ஒரு தேசமாக்கக் கருதும் சேர் ஜோன் கொத்தலாவல போன்ற தலைவர்கள் இந்தச் சிக்கலை எப்படியும் தீர்தது வைக்கவே முயன்றுவருகின்றனர். முதலமைச்சர் சில நாட்களுக்கு முன் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு வீரசிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு விடையாக அளித்த வாக்குறுதியில் தமிழ், சிங்களம் இரண்டும் சம அந்தஸ்துள்ள தேசிய அரசியல் மொழிகள் என்று கூறியுள்ளார். ஆனால் இந்தக் கூற்று எவ்வளவு உறுதியுள்ளது, எவ்வளவுக்கு தமிழ மொழியைக் காப்பாற்றும் என்பதை நாம ஆராய வேண்டும.

சாதிப்பகை; சமயப்பகை என்னும் புயல்களைக்கிளப்பிவிட்டுத் தம் சுயநலத்திற்காகவும; பதவிக்காகவும் 'ஐயோ! தமிழுக்கு ஆபத்து தமிழ் மொழிககு ஆபத்து, சிங்கள மொழிக்கு ஆபத்து, என்று அலறும் அரசியல்வாதிகள் ஆயிரங் கூறுவர். அதில் இலஙகையனான தமிழனும் சரி, சிங்களனும்சரி மயங்கிவிடமாட்டான் என்பது உறுதி. இன்னும் ஒன்று, இந்தச் சிக்கலிற் பழங்காலதது இலங்கைச் சரித்திரத்தை ஆராய்தல் அவசியமாகும். சிறு சிறு பூசல்களைவிட இலங்கை மக்கள் ஒவ்வொருவரும் இவ்வகையான மொழிச்சிக்க

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)




C. C. C. பண்படுத்தும் புகையிலைப் பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்

தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.

C. C. C. பசளை கிடைக்குமிடங்கள்:-

சுன்னாகம் — R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் — M. S. மணியம் அன்ட் கோ

ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்


# கேள்வி மண்டலம்

குள்ளனூர்

குள்ளனுக்குக் கேள்விகள் எழுதி அனுப்புவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடவேண்டும். சொந்தப் பெயர் வெளிவருவதை விரும்பாதவர்கள் புனை பெயர் ஒன்றினைக் குறிப்பிடலாம். ஆனால் கேள்விகளுடன் உண்மைப் பெயரும் விலாசமும் எழுதி அனுப்புதல் வேண்டும். ப—ர்

அ. இராசேந்திரம், மூதூர்

கேள்வி: கவிஞனுக்கும் கலைஞனுக்குமுள்ள வித்தியாசமென்ன?

மறுமொழி: கவிஞன் சொல்லிற் காட்டுவதைக் கலைஞன் செயலிற் காட்டுவான்.

முகம்மது, முதலாம் குறிச்சி, ஏறாவூர்.

கே: சில வாலிபர்கள் காதலிப்பதேன்?

மறு: சில பத்திரிகை ஆசிரியர்களுக்கு வேலைகொடுப்பதற்காக!

இ. சிவலிங்கம், யாழ்ப்பாணம்

கே: ஆங்கில உடைகள் அணிந்துகொண்டு தமிழ் உரிமை கேட்பது முறையா?

மறு. அப்படியானால் என்னை ஏன் எழுத்தாணியும் தேடமொறு உடுக்கின்றீரா?

கே: எழுத்தாளனுக்கும் வியாபாரதாபனத்துக்கும் உள்ள வேற்றுமை யாது?

மறு: எழுத்து வியாபாரத்துக்கு மூளையும் வேண்டாம் முதலும்வேண்டாம். வியாபார தாபனத்துக்கு இரண்டும் வேண்டும்.

கே: போலித் தலைவர்கள் புகழ் பெறுவது எங்ஙனம்?

மறு: பெரிய மரங்களை வெட்டி வீழ்த்தினாற்றான் சிறிய மரங்கள் தலைகாட்டும். அதே போல் மக்கள் மதிக்கும் தலைவர்களை ஒதுக்கித் தள்ளினாற்றான் போலித் தலைவர்கள் சிறிதுகாலமாவது புகழ் பாட முடியும்.

புரட்சி லேவ்வை, மக்கா மேடி, ஏறாவூர்.

கே: எத்தேசத்தினர் நாகரீமாக வாழ்கின்றனர்?

மறு: நாகரீகம் என்ற போர்வையிற் காட்டுமிராண்டித்தனம் நுழையா நாட்டினர்.

கே: எலும்பை வளர்க்க என்ன செய்வது?

மறு: வயிறு குலுங்கச் சிரிக்க வேண்டியது!

த. மாணிக்கம், மட்டக்களப்பு

கே: சுட்ட வித்து முளைக்குமா?

மறு: ஆம்; தாலவித்து (பனங்கொட்டை) முளைக்கும்.

சே. தம்பித்துரை, கோப்பாய்

கே. வெங்காயங்களுக்கு இப்போது மதிப்பு எங்கே?

மறு: முன்னர் அரசியல் அரங்கில் இருந்து; இப்போது கூட்டுறவுச் சங்கங்களில்.

கே: துரைரத்தினம், தெல்லிப்பழை

கே: சில அரசியற் தலைவர்கள் இலங்கையில் 'தமிழ்நாடு' ஏற்படுவதை ஏன் விரும்புவதில்லை?

மறு: தமிழ்நாடு ஏற்பட்டால் சைவமும் தமிழும் தழைத்தோங்கிவிடும் என்ற காரணத்தால்.

மு. பாலசுந்தரம், பஸல்லேன், வெள்ளவத்தை

கே: தமிழ் எழுத்தாளர் சங்கம் இயங்காதிருப்பதேன்?

மறு: சங்க அங்கத்தவர்களிடையே 'சலிப்பு' ஏற்பட்டுவிட்டதுபோலும்!


வவுனியாவில்

ஈழகேசரி

கிடைக்குமிடம்.

சுத்தானந்த பவன்

வவுனியா

மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை — 11

# அப்துர் றஹ்மான் ஆலிம் புலவர்

## பண்டிதர் வி. சீ. கந்தையா

அட்டாளைச்சேனை, என்பது நாம் முன்னர் கண்ட வளமார்ந்த அக்கரைப்பற்றினையடுத்த ஓர் ஊர். முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராய்க் குடியேறியிருக்கும் இவ்வூர் பண்டுதொட்டே அமைதிக்குப் பெயர்போனதொன்றாய் இருந்திருக்கிறது. முஸ்லிம் மதப்பெரியார் பலரின் தோற்றத்திற்கிடமாகி மட்டக்களப்பு முஸ்லிம் மக்களுடைய மதிப்பினையும் கவர்ந்து விளங்கிய ஊர் இது. இங்குள்ள மக்கள் வயல்வளம் செய்யும் நல்லுழவர். நாடோடிக் கவிதைகள் பலவற்றுக்கு இவ்வூர் பிறப்பிடமானது. மக்களெல்லாரும் பண்பட்ட நன்மனமுடையவர்கள். தமிழ் மொழியினையே உயிராகக் கருதிவாழ்ந்த முஸ்லிம் அறிஞரின் பிறப்பிடமான இவ்வூரிலேதான் மட்டக்களப்பு முஸ்லிம் ஆசிரியர்களுக்கான அரசினர் பயிற்சிக் கலாசாலையும் இன்று அமைந்து ஊரின் சிறப்பினை மேலும் மிகுத்துள்ளது.

இத்தகைய வளம்பதியிலேயே நாம் இங்கு குறிப்பிட விரும்பும் புலவரும் பிறந்தவர். ஆலிம்களெல்லாம் அரபுமொழியிற்றான் புலமையாளர் என்னும் விதிக்கு விலக்காயுள்ளவர்கள் மட்டக்களப்பு முஸ்லிம் பரம்பரையினர். எவ்வளவுக்கு அன்னாருடைய மதஞானம் கூடுகின்றதோ அவ்வளவுக்குத் தமிழ்மொழிப் புலமையும் அவரிடை மிக்கிருந்ததென்பதை இங்கு வாழ்ந்த அறிஞர் பலர் காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

நாம் நிகழ்காலத்திலே கருதிற் பொறித்துக் காக்கவேண்டிய சிறப்புமிக்க எத்தனையோ புலமையாளர்களை மறந்துவிடுவதிற் பெயர்பெற்றவர்கள், இந்தச் சிறப்பினையே புலவர் பெருமகனான அப்துர் றஹ்மான் ஆலிம் அவர்களும் பொது மக்களிடத்திலிருந்து அக்காலம் பெற்றிருந்தார்கள். அதனாற் போலும் இன்னாருடைய வாழ்க்கைக் குறிப்புகளைதானும் திட்டமாக இன்று கிடைப்பதாயில்லை. ஏறக்குறைய 50 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த ஆலிம் அவர்களுடைய பிறப்பு கி. பி. 1850 ஆம் ஆண்டளவில் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

"மணமங்கல மாலை பாடிய ஆலிம் அப்பா" என்று சொன்னவுடனே மக்கள் அப்துர் றஹ்மான் புலவர் அவர்களை பேசிணைந்துகொள்ளத்தக்க சிறப்பினை இவர் பெற்றிருக்கின்றார் என்பது தெளிவான கருத்தாகும்.

நபிநாயகம்(ஸல்) அவர்களின் புதல்வியான பீவி பாத்திமாவுக்கும் அலி (றலி) அவர்களுக்கும் நடந்த திருமணச் சிறப்பினைப்பற்றிய "மணமங்கல மாலை" என்னும் பெருநூல் ஒன்றுக்கும், தனிப்பாடல் பலவற்றுக்கும் ஆசிரியராகிய ஆலிம் அவர்கள் சிறந்த தமிழறிஞர். தமிழ் வளர்க்கும் ஆசையினால் இளமையிலே சிலருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியை இவர் மேற்கொண்டிருந்தாரெனத் தெரிகின்றது. ஆண்டவனை அணியும் பெருவிருப்பும் இளமையிலேயே வாய்க்கப்பெற்றிருந்த இவர் குர்ஆன் ஓதுதலில் சற்றுந் தவறாத கருத்துடையவராய் இருந்தனர். அதனாலே அரபு மொழி அறிவும் நிரம்பப் பெற்றிருந்ததோடு குர் ஆன் ஓதுவிக்கும் ஆர்வமும் மேற்கொள்ளப் பெற்றிருந்த இப் பெரியார் தம் வாழ்நாட்களில் முஸ்லிம் மதஞானிகளுக்கெல்லாம் பொதுவான 'ஆலிம்' என்ற திருப்பெயரைத் தமக்கே சிறப்பாக்கிக்கொண்டவர். ஆலிமுடைய பாட்டு என்று இன்று மக்கள் வழங்கும் பாடல்கள் பல இப்பெரியாருடையன வென்றே அறிகின்றோம்,

"வண்ணத் தரள மணிதானோ
வயங்கும் மலைமா
மலர்தானோ
விண்ணுற் றொளிர்வெண்
மதிதானோ
விரும்பும் கனக
மணிதானோ
எண்ணற் றிலங்கும்
இரத்தினமோ
எழில்சேர் கிளியோ
மயிலதுவோ
கண்டோற் றிடுதற்
கரசான
காட்சி தரும்பாத் திம்மாவே"

என்னும் விருத்தச் செய்யுளானது "மணமங்கல மாலை"யிலே பாத்திம நாயகியாரின் எழிலினைக் கூறுவதாயுள்ளது. இயற்கையிலமைந்த பல உவமைகளை அச்செல்வியாரின் நல்லழகுக்கு இணையாகக் கூறியும் அமையாத புலவருடைய உள்ளச் சிறப்பினை விளைவடிவிற் நோக்கப்பட்டுள்ள முடிபுச்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)

★ அஞ்ஞான இருளகற்றி உலகிடை அறிவொளி ஏற்றி வைத்த அகில உலக முஸ்லீம்களின் ஆத்மீகத் தலைவர் அண்ணல் விறசூல் பிறந்த தினம் 29-10-55இல் முஸ்லீம் உலகெங்கணுங் கொண்டாடப்பட்டது.

# நபி பிறந்தனரே!

## அ. ஸ. அப்துஸ்ஸமது

அஞ்ஞான இருள் கவ்வியிருந்த உலக மக்களுக்கு அறநெறிகளை விளக்கிச் சீரிய வாழ்வும், நேரிய பாதையும் அளிப்பதற்காக, மாசற்ற பூரணச் சந்திரன்போலத் தோன்றினார்கள் முஹம்மதுநபி (ஸல்) அவர்கள். இவருடைய பிறப்பு அஞ்ஞானத்தை (குபிரை) ஒழித்துவிட்டதென்றால் மட்டும் போதாது அதன் குலத்தையே களைந்து விட்டதென்கிறார் சீறாப்புராண ஆசிரியர் உமர்.

நெறிநிலை திரியா
மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும்
பரந்து
அறவறந் தவறி
இல்லறம் மடிந்து
சுடரிலா மனையது
போலக்
குறைபடும் காலம்
இருளொனுங் குபிரின்
குலமறுத் தறநெறி
விளக்க
மறுவிலா தெழுந்த
முழுமதி போல
முகமது நபி பிறந்தனரே.

"மறுவிலா தெழுந்த முழுமதி" என்று நபிபிரானை யிட்டுப்புலவர் கூறுவது, பல அழகுருவங்களை ஏற்று இங்கே நிற்கின்றது. பூரணச் சந்திரனும் களங்கமுடையது. நபிபிரானோ எவ்வித மாசுமற்ற மறையாளர். எனவேதான் "மறுவிலா தெழுந்த முழுமதி" எனப் புலவர் குறிப்பிட்டார். சந்திரன் தன் கதிர்களை வீசும். நபிபிரானும் மக்களிடம் தண்ணிய கருணையை உடையவர். சந்திரன் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுப் பிரகாசிக்கும். நபியவர்களோ இறைவன் ஒளியினின்றும் படைக்கப்பெற்று, அவன் ஆக்ஞையையே உலகிற்குக் கூறுபவர். ஒரு சொல்லுக்கே இவ்வளவு பொருளையும் தந்து பாடிய புலவனின் பெருமைதானென்னே! பெருமானாரின் பிறப்பு அன்று மக்களுக்கு எவ்வளவு தண்ணளியை அளித்தது என்பதை மேலுமொரு பாட்டிற் காண்போம்.

அன்று மக்களிடம் ஒருநோய் பரந்து கிடந்தது. அது உளநோயோ உடல் நோயோவல்ல. மனிதனை அழிவையும், இழிவையும் நோக்கி அழைத்துச்சென்ற பலநோய் அது. ஊனும் உளமும் வாலையும் விழைவித்து மனித சமுதாயத்தையே சீர்குலைத்தது அந்நோய். உடல், உளம் ஆகியனவற்றை உள்ளிட்டு "பவநோய்" என்பர் அறிஞர்கள். இந்த நோயைப்போக்கி மனிதன் மனிதனுக வாழ ஒரு அருமருந்து, பெற்றற்கரிய பெருமருந்து கிடைத்தது.

உயிரினங்களும், தாவரவர்க்கங்களும் மழையை எதிர்பார்த்து வாழ்வன. "வானம் பொய்த்திடில் வளம் குன்றும்" என்றார் வள்ளுவரும். ஆனால் பெய்யும் மழை பயிரினங்களைச் செழிக்க வைக்கும் மழையாகஇருக்கவேண்டுமே! காலந் தவறிப் பெய்யின் உபயோகமற்று இருந்தவையும் அழிந்துவிடும். எனவே பயிர் செழிக்கச் "செழுமழை" தேவை. செழுமழை பெய்வது பயிரினங்களுக்கு ஒரு வரப்பிரசாதமே. "தீன்" என்னும் (இஸ்லாம்) பயிரும் பலகாலம் உயிரும், ஒளியும் தரும் மழை இன்றி வாடிக்கிடந்தது. அதற்கோர் செழுமழைபோல, தீனுல் இஸ்லாம் தழைத்தோங்க ஒரு செழுமழையாக மஹான் முஹம்மது நபியவர்கள் தோன்றினார்கள்.

ஆடவர்க்கு அழகு தருவது அவரது பரந்த நெற்றி. பரந்த பிரகாசமான நெற்றி அவர்களது பண்பையும், அறிவையும் காட்டும். நெற்றியின் நடுவில் ஒரு அழகான பொட்டும் வைத்தால் அழகுக்கு இன்னும் ஏற்றம் ஏற்படுகிறது. இதுபோல மக்காவாசிகளிடையே குறைஷி வம்மிஷத்தினர் நெற்றிபோல விளங்கினர். இக்கூட்டத்தினரிடையே நபிபிரான் பிறந்தது அந்தப் பரந்த நெற்றியில் பிரகாசமான ஒரு திலக மிட்டது போலாகும்.

விளக்கின்றேல் வீடே மங்கிவிடும். வாழ்க்கைக்கே ஜீவனாடி ஒளி. ஆனால் உலகம் இருளில் அமிழ்ந்துகிடக்கின்றதென்றால் இது ஒரு பயங்கரச்செய்தி. ஆம் இப்படியிருந்தது அன்று உலகம். அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்தது. இவ்வேளையிலேதான் அறிவுப்பாதைக்கு ஒரு ஒளித்தம்பம் ஏற்பட்டது. மானிலத்துக்கோர் மணிவிளக்காக அணையாதவிளக்காகத் தோன்றினார் அண்ணல் விறசூல் (ஸல்) அவர்கள்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்துப் பேறுமன்னர்கள் — 36

## பண்டிதர்

## கா. பொ. இரத்தினம் எம். ஏ.

"பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித்தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது ..... எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது. எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறமை அழிந்து விடப்படும். அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும் வீரரையுங் கொண்டாடாத தேசத்தில் அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், நாம் இவ் விஷயத்தில் தமோகுணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோற்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். வள்ளுவர் ஜன்ம தினம் நிச்சயமாகத் தெரியவில்லை. மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோவிற் பூசாரிக்குத் தெரியக்கூடும்." இப்படி மகாகவி பாரதியார் தன் ஆசையை 'கவி' என்ற கட்டுரையில் வெளியிட்டிருக்கிறார். வைகாசி அனுடமே வள்ளுவரின் திருநாளென ஸ்தாபித்துத் தமிழர் வாழ் இடங்களிலெல்லாம் அதைக் கொண்டாட வேண்டுமென முழக்கி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தமிழ் மறைக் கழகத்தையும் தோற்றுவித்து அல்லும் பகலும் உழைப்பவர்தான் திரு. க. பொ. இரத்தினம் அவர்களாவர்.

"உடல் பொருளாவி மூன்றனையும் செந்தமிழுக்கும் சைவசமயத்திற்கும் அர்ப்பணஞ் செய்து ஒப்பாரும் மிக்காருமின்றித் தமிழ்நாட்டில் விளங்கிய யாழ்ப்பாணத்து நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களைப்போற்றித், தங்கள் தங்களாலியன்ற கைம்மாறுகளைச் செய்தல் தமிழ் மக்கள் ஒவ்வொருவரதுங் கடமையாகும்" என்று முன்னுரையில் கூறி நாவலர் நினைவு மலர் ஒன்றை மணம் வீசு மலராக 1938இல் வெளியிட்டு நாவலர் அவர்களின் பெயரை இளம் உள்ளங்களில் மீண்டும் நிலைநாட்டிய பெருமையும் அவருக்குரியதாகும்.

இப்படியான பெருந்தொண்டுகள் மாத்திரமன்றிச் சென்ற இருபது வருடகாலமாகப் பேச்சாலும் — எழுத்தாலும் அவர் செய்த சேவை அளவிடற்கரியது. சொல்லாராய்ச்சி தொடக்கம்பாரதியார்பற்றிய கட்டுரை வரை தன் கைவண்ணத்தை அவர் காட்டியுள்ளார். திருவாசகம், கவிகளின் கருத்தொற்றுமை, இராவணன் அவன் — இராமன் இவன், காகுந்தனின் கனிப்போர், கம்பன் வகுத்த அரசியல், கம்பர் காட்டும் பெண்கள், வசைபாடக் காளமேகம், நாயகனோடுயிர் நீத்த நல்விசைப் புலமை மெல்லியலார், தாவாரம் இல்லைத் தனக்கொரு வீடில்லை, நன்னூற்பாயிர ஆராய்ச்சி, பழந்தமிழ்ப் பாவலருங் காவலரும், புத்தகங்களின்போர், காளிதாசனுக்குமொருகுருவுண்டா?, கற்பின் தெய்வம், ஈழநாடும் தமிழும், உயிரைக் காணலாமா?, எழுத்தும் — எழுத்தாளரும், கலையும் — பண்பாடும், தாய்மொழி இயக்கம், வாழவழிகாட்டிய வள்ளுவர் என்ற இருபது கட்டுரைகளும் அவர் எழுதியவற்றில் சிறந்தன என்பது என் அபிப்பிராயமாகும்.

இலங்கைத் தமிழ்விழா மலரிலே அவர் எழுதியுள்ள ஈழநாடும் தமிழும் என்ற ஆராய்ச்சி இருபத்தைந்து பக்கங்களை அடக்கியிருக்கிறது. ஈழநாட்டில் பிறந்த தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படித்துப்பார்க்க வேண்டிய ஒரு நல்ல கட்டுரை இது. இலங்கையின் தொல் குடிகள், தமிழர் ஆட்சி, புலவர்கள், ஆதிகாலம், யாழ்ப்பாண அரசர்காலம், ஐரோப்பியராட்சிக்காலம், நாவலரும் பிறரும், காப்பியங்கள் — புராணங்கள் — பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், நாடகங்கள், இசைப் பாடல்கள், உரைகள், இலக்கண நூல்கள், கட்டுரைகள், நூற்பதிப்பு, அகராதிகள், பத்திரிகைகள், மொழிபெயர்ப்பு, கல்வெட்டுகள், நாட்டுப்பாடல்கள் என ஒன்றையேனும் விட்டுவிடாமல் குறிப்பிட்டிருப்பது போற்றக்கூடியதே. எனினும் குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்குப்பின் தோன்றிய எழுத்தாளர்களைபற்றியாவது, நூல்களைப்பற்றியாவது, பத்திரிகைகளைப்பற்றியாவது யாதொரு குறிப்புங்காணேம். விபுலானந்த அடிகளைப்பற்றிமட்டும் சில இடங்களில் எழுதியுள்ளார். இக்காலத்து எழுத்தாளரைப்பற்றி அவர் ஓரே ஒரு இடத்திற் சூசகமாக எழுதி இருப்பது இது:- "ஐரோப்பிய மொழிகளின் தொடர்பால் தமிழிலும் நவீனம் எனும் புது இலக்கியவகை தோன்றிற்று. இக் காலத்திலே நவீனங்களைப் பலர் எழுதுகிறார்கள். இவற்றுள்ளே பிழை மலிந்தன பலவாகும்"

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை" என மகுட்மிட்டு அவர் எழுதிய கட்டுரையும் மிகவும் பெரியதும் ஆராய்ச்சி நிறைந்ததுமாகும். இக்காலத்தோடு சைவசமயம் ஒட்டி வளரவேண்டுமென்னும் ஆவலால் எழுந்தது இது. "சாதி நெறியை நீக்கின் சைவம் சிறக்கும் என்ற பந்தியில் அவர் குறிப்பிடுவதை நோக்குங்கள். "இத்தகைய பழம் பெருஞ் சமயத்தை வடநாட்டிலே ஆரியரிடையே தோன்றிய வேத நெறியுடன் — மிருதிவழியுடன் — பார்பனீயத்துடன் பிணைத்துப் பெருமை காண்பதும், சைவமென்று சாதி நெறியைத் தழுவுவதும் அறிவுடைமையாகாது; தமிழ் மரபுமாகாது." சமயம் வாழ்வோடு சேர வேண்டும் என்பதை இக்கட்டுரையின் முடிவிலே அவர் நன்றாக வற்புறுத்துகிறார் "மக்களின் வாழ்க்கை

(தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க)

## வாரச் செய்தி

இலங்கைத் தேசிய வீடமைப்புப் பகுதியினர் சென்ற பத்து மாதகாலத்தில் தனிப்பட்டவர்கள் வீடு கட்டுவதற்கென ஒரு கோடி ரூபாய் கடனாக உதவியுள்ளனர்.

### வீடுகள் இழந்தனர்.

சமீபத்திற கொழும்பிலும் பிறபகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் 90,000 பேர் வீடுகளை இழந்துள்ளனர். இப்புள்ளி விபரத்தைச் சமூக சேவாப் பகுதியினர் உதவியுள்ளனர்.

### கயரோகம்

அம்பாந்தோட்டையிலுள்ள கச்சேரி ஊழியர்களில் 95 வீதத்தினருக்குக் கயரோகம் பிடித்திருப்பதாக அறியக்கிடக்கின்றது.

### கடுங் காவல்

பாணந்துறையைச் சேர்ந்த பஸ் தொழிலாளி ஒருவர் சிறுமி ஒருவரை முத்தமிட்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் அத்தொழிலாளி குற்றவாளியாகக் காணப்பட்டார். நீதிபதி அவருக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

### முதற் பரிசு

கொழும்பு காலிமுக விடுதி மாளிகையிற் பணியாற்றும் பெரேரா என்னும் 19 வயது வாலிபனுக்கு ஆஸ்பத்திரி லொத்தரில் முதற்பரிசான 94550 ரூபாய் கிடைத்துள்ளது. சென்ற மாதந்தான் இவ்வாலிபனுக்கு வேலைகிடைத்தது. முதற் சம்பளத்தில் அதிஷ்டலாபச்சீட்டுப் பெற்று அவர் முதற் பரிசையே தட்டிவிட்டார்.

### இடி விழுந்தது

அம்பலாங்கொடையிற் சமீபத்தில் நடைபெற்ற திருமண வீட்டில் இடி விழுந்தது. இதனால் 50 பேர் மயக்கமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுச் சுகமடைந்துள்ளனர்.

### மிருக ஊர்வலம்

சென்னை மிருகக்காட்சிச்சாலையின் நூற்றாண்டு விழா சென்றவாரம் கொண்டாடப்பட்டது. இவ் விழாவின்போது சிங்கம், யானை, ஒட்டகம், புலி முதலிய மிருகங்களின் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

### அபிப்பிராய பேதம்

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்குப் பரதநாட்டியம், யோகாசனம் என்பன பயிற்றுவதுபற்றி அமைச்சர் அவையில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

### சுட்டுக் கொன்றனர்

பர்மா பிரதிநிதிகள் சபை அங்கத்தவரான போகியாவ்தான் தமது தொகுதியில் அரசினர் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது கலகக்காரர்களாற் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பெரிய துருத்தி

ஸ்கன்தார்பிலுள்ள பிரிட்டிஷ் உருக்குத் தொழிற்சாலையொன்று 7,50,000 பவுண் செலவில் மாபெரும் உருவத் துருத்தி ஒன்றினைச் செய்துளது. சதுர அங்குலத்துக்கு 35 இறுத்தல் அழுக்கத்தில் நிமிடத்துக்கு 15000 கன அடி காற்றை வீசும் சக்தி இதற்கு உளது.

### அரிசி ஆராய்ச்சி

தென்னிந்தியர்கள் அரிசி உணவு உட்கொள்வதால் அவர்களிற் பெருந் தொகையினர் கண் ஒளி இழக்கின்றனர் என அரிசி ஆராய்ச்சி செய்தவர்கள் கூறுகின்றனர்.

---

## புதிய ஜே. பி.

### திரு. பெ. சுப்பிரமணியம்

மட்டக்களப்பு மாவட்ட அதிபரின் கந்தோர் உதவியாளர் முகாந்திரம் பெ. சுப்பிரமணியம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

சிறுகதை : : : கே. டானியல்

# மாடிப் பேச்சு

அங்குமிங்குமாக மக்கள் கூடிநின்று எதைப்பற்றியோ எல்லாம் பேசினார்கள். ஒலிபெருக்கியின் ஓசை, துண்டுப் பிரசுரங்களின் எண்ணிக்கை என்பன ஆரவாரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தன.

"எதைப்பற்றிப் பேசப் போகிறார்? எதையும் இன்று பார்த்து விடுவோமே!" என்று அங்கலாய்த்துக் கொண்ட மக்கள் அந்த மாலைப் பொழுதைத்தான் எதிர்பார்த்திருந்தனர்.

மக்களுக்கு மிக மிக வியப்பு? இது காலவரை தமிழே பேசியிராத மாணிக்கவேலர் இன்று தமிழ்ச் சிக்கலைப் பற்றிப் பேசப் போகிறார் என்றால் ஆச்சரியம் வராமலாவிருக்கும்! "தமிழ்வாசனையே அற்ற குடும்பம்" என்று பெயர் எடுத்துவிட்ட குடும்பத்திலிருந்து மாணிக்கவேலர் தமிழுக்காகப் பேசுகிறார் என்றால் மக்கள் கூடிக் கூடிப்பேசாமல் வேறென்னதான் செய்வார்கள்? மூலைமுடுக்குகள், சந்து பொந்துகள் எல்லாம் ஒரே ஆரவாரம்; மாணிக்கவேலர் தமிழைப் பற்றிப் பேசப்போகிறார் என்பதே எங்கும் பேச்சு.

"சகோதரர்களே, தமிழன்பர்களே! வந்துவிட்டது ஆபத்து. கட்டுண்டோம், பொறுத்திருந்தோம். ஆனால் இனிக் கணமும் பொறுக்கமாட்டோம். எமது மொழி, எமது கலாச்சாரம், எமது பண்பாடு இவை எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. சங்கம் வளர்த்த தமிழ் இலக்கியங்களெங்கே? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்தகுடித் தமிழன் எங்கே? ஆம்; எல்லாம் அழிந்தே விட்டன. இன்னே போர், கர்மவீரர்களே போருக்கெழுங்கள்! கொலை வாளினை எடடா" ... ... மாணிக்கவேலர் பேசுகிறார். மக்கள் முஷ்டியை உயர்த்திக்கொண்டு கெம்பி எழுந்து கோஷமிடுகின்றனர் பின்பு ... ...

இதேபோன்று கற்பனை செய்து மனக்கண்ணில் பார்த்து மகிழ்ந்த தமிழன்பர்களும் அந்தப் பகுதியில் நிறைய இருந்தார்கள்.

❖ ❖ ❖

மாணிக்கவேலருக்கு வயது நாற்பதுக்கு மேலாகிவிட்டது. அவரைத் தெரியாதவர்கள் அந்தப் பகுதியிலேயே இருக்க முடியாது. அந்தப் பகுதிமட்டுமல்ல இந்த நாட்டுக்கே அவரைத் தெரியாமலிராது. அதுவும் சிவப்பிரகாசம் பிள்ளையின் மகன் என்றாலே உலகத்துக்கே பிரபலம்.

மாணிக்கவேலரின் தந்தை வெறும் சிவப்பிரகாசமாகத் திருகோணமலைக்கு உத்தியோகம் பார்க்கச் சென்றவர், அங்கு ஒரு பெரிய இடத்தில் திருமணம் செய்துகொண்டமையால் சிவப்பிரகாசம் பிள்ளையாக மாறிவிட்டார். ஸ்ரீதனம் அவரைப் பிள்ளையாக மாற்றிவிட்டது. கண்ணுக்கெட்டாத் தூரம்வரை பரந்து கிடந்த வயல் நிலம், நூற்றுக்கணக்கான பண்ணை ஆட்கள், கணக்கற்ற மாடுகன்று இத்தனையும் கட்டி ஆண்ட சிவப்பிரகாசம் பிள்ளை விவாகமாகிப் பதினைந்து வருடங்களின் பின் ஒரேமகன் மாணிக்கவேலருடனும், சகல செல்வங்களுடனும் ஊர் வந்து சேர்ந்து பிறந்த பூமியிலேயே நிலைத்துவிட்டார். கை நிறையப் பணமிருக்கும் போது அவர் எங்கு வாழ்ந்தாற்றான் என்ன?

இன்று கிட்டங்கிகளாகக் கிடக்கும் வீடுகள் எல்லாவற்றையும் அன்று சிவப்பிரகாசம் பிள்ளைதான் கட்டிவைத்தார். அதுமட்டுமல்ல பென்னம்பெரிய மாடி வீடொன்றைக் கட்டிமுடித்து முதல்முதலில் மாடிவீடு கட்டிய பெருமையையும் அந்தப் பகுதியில் தேடிக்கொண்டார்.

அந்த நாட்களில் எத்தனையோ சீமான்களுந்தான் அந்தப் பகுதியில் இருந்தார்கள். இருந்துமென்ன, அவர்கள் சாதிக்காத ஒரு சாதனையை நிறைவேற்றியதால் "மெத்தை வீட்டுக்காரர்" என்ற பெயர் சிவப்பிரகாசம் பிள்ளைக்கேசார்ந்துவிட்டது.

மாணிக்கவேலர் மாடி வீட்டு மைனர். பென்னம் பெரிய அரண்மனை போன்ற மாடிவீடு; அழைத்தவுடன் நான் நீ என்று போட்டியிட்டு ஓடிவர ஆட்கள்; தேவாமிர்தத்தையே கைக்குத் தருந் தன்மை படைத்த செல்வம். இத்தனையும் அவரைச் சும்மாவா விட்டுவிடும்?

சின்னஞ்சிறு குடிசைகளில் எல்லாம் தமிழின் பரிமளிப்பு வாசனை வீசிக்கொண்டிருக்கும்போது, மைனர் மாணிக்கவேலரின் மேல்மாடியில்மட்டும் ஆங்கிலம் ஆட்சி புரிந்தது.

பதினெட்டுப் பத்தொன்பது வயதைத் தாண்டுவதற்கிடையிலேயே மாணிக்கவேலருக்கு 'காதல்' உச்சக் கட்டத்துக்கு வந்துவிட்டது.

அப்போது அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த உலாந்தாக்காரர் சந்ததியினருடன் மாணிக்கவேலருக்கு நிறையத் தொடர்பும் ஈடுபாடும் இருந்து வந்தன. அவரின் பொழுது இன்பமாகக் கழிந்து வந்தாலும், அவர் உள்ளத்தில் மாமன் மகளான — தமிழ் மணம் கெடாத — அம்பிகை இடம் பெற்றிருந்தாள்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க)

---

# யார் வைத்தியர்?

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தார் (கொழும்பு) இவ்வாண்டு 'யார் வைத்தியர்?' என்ற நாடகத்தை அரங்கேற்றினர்.

பிரெஞ்சு நாடகாசிரியர் மொளியரின் "Love is the best Doctor" என்ற நாடகத்தைத் தழுவி எழுதப்பட்ட இந் நாடகம் இம்மாதம் 22ஆம் 23ஆந் திகதிகளில் கொழும்பில் நடிக்கப்பெற்றது.

இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராஜாவினால் தயார் செய்யப்பட்ட இந் நாடகம் சிறப்பாக ஒரு நகைச்சுவை நாடகமாகவே அமைந்திருக்கின்றது.

தனது மகளின் மனோநிலையைச் சிந்திக்காமல் மகளுக்குக் கலியாணமே வேண்டாமென்று நிற்கும் கிழவர் சிங்காரவேல், அவளின் தேக அசௌக்கியத்தை நினைந்து நினைந்து மிகவும் வருத்தப்படுகிறார். பல வைத்தியர்களிடம் அவளைக் காட்டி யோசனை கேட்கிறார். பலனில்லை. ஆனால், அவளின் காதலன் ஒரு மனோதத்துவ வைத்தியர்போல வந்து அவளின் நோயைக் குணப்படுத்த முயலுகிறான். தான் அவளை விவாகஞ் செய்வதுபோற் பாசாங்குசெய்ய வேண்டுமென்று கிழவரிடங் கூறி உண்மையாகவே விவாகத்தைப் பதிவு செய்துகொண்டு அவளுடன் ஓடிவிடுகின்றான். இதற்கெல்லாம் சிங்காரவேலுவின் வீட்டுப் பணிப்பெண் உடந்தையாக இருந்து உதவி புரிகிறாள். இதுதான் கதை.


தளர்ச்சியும் மனச்சோர்வும் உருவெடுத்தவர் சிங்காரவேலு. இப்பாத்திரத்தைத் தாங்கி நடித்த குமாரசாமியும், சரளமாகப்பேசிக் காரியத்தைச் சாதிக்கும் வீட்டுப் பணிப் பெண்ணாக நடித்த செல்வி செல்வஜோதி செல்வத்துரையும் இந்நாடகத்தின் வெற்றிக்கு முக்கியமானவர்கள் என்றே கூறவேண்டும். நாடகத்திற்கு விறுவிறுப்பையும் உணர்ச்சியையும் ஊட்டியது இவ்விருவரின் நடிப்புத் திறனேயாகும். மற்றையோரும் குறை கூற முடியாதவகையில் நடித்திருக்கின்றார்கள். வழிப்போக்கனாக வந்த சண்முகநாதன் ஒருசில நிமிஷங்களே மேடையில் தோன்றியபோதிலும் தாம் ஒரு குணசித்திர நடிகரென்பதை நன்கு காட்டிவிட்டார்.

பொழுதுபோக்குச் சம்பாஷணைகளில் 'அடிபட்ட' சில விஷயங்கள் இன்றைய அரசியல் வட்டாரங்களில் அடிபடும் சிக்கல்களாயிருந்தன. இவைகளைத் தவிர்த்திருக்கலாம். Sly Humour என்று ஆங்கில நாடகங்களிற் கூறப்படும் விகடத் துணுக்குகளைச் சார்ந்த துணுக்குகள் பல்கலைக் கழக அந்தஸ்திற்குச் சாதகமாயிருந்தனவென்று கூறுவதற்கில்லை.

மொத்தத்தில் 'யார் வைத்தியர்?' பொழுது போக்குக்கு ஏற்ற ஒரு நல்ல நாடகம். இப்படியான தயாரிப்புகள்மூலந்தான் நாடகங்கள் முன்னேற முடியும்.

— சுந்தர்

---



## ஊர் வதந்தி

❖ ❖ கொண்டோடி ❖ ❖

○ அரசாங்க அரிசிக்குதத்தில் பெருச்சாளிகளின் தொல்லை அதிகரித்துவிட்டதாம்.

○ ஐக்கிய இலக்கத் தாபனங்களிற் புகுந்திருப்பவை இருகாற் பெருச்சாளிகளாம்.

○ யாழ்ப்பாணத்து விளைபொருள் சமாசத்துப் பெருச்சாளிகள் சில சமீபத்தில் வெற்றிகரமாய் உதைத்துத் தள்ளப்பட்டனவாம்.

○ உதைக்க விருந்த கால்களை யறிந்து அவற்றிடம் சரணடைய இரவோடு இரவாக மோட்டாரில் ஓடித்திரிந்தவர்கள் இரு பெரும் நிர்வாகிகளாம்.

○ அந்த நிர்வாகிகளில் ஒரு சிலரை நகரத்துச் சுவர் சுலோகங்கள் நையாண்டியும் செய்தனவாம்.

○ ஊழல் மிகுந்த நிர்வாகத்தில் உடைப்பு ஏற்பட்டால் அடைக்க முடியாதாம்.

● சமாச நிர்வாகத்தை உடைத்துத் தள்ளியது நீர்வேலிப் பக்கத்து வாழைப் பழந்தானும்.

○ வாழைப்பழத்திலும் பார்க்கப் பலாப்பழம சாப்பிடுபவர்கள் இப்பொழுது பலசாலிகளாக் காணப்படுகிறார்களாம்.

○ திறமான பலாக்காய்களுக்குத் தென்னிலங்கை பெயர் போனதாம்.

● மொழிச்சிக்கல்பற்றி முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கை பலாக்காய்ப்பால் போன்ற தெனப் பலரும் அபிப்பிராயப் பட்டனராம்.

○ சுயமொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்குத் தெரிவிக்கப்படும் அபிப்பிராயங்கள் பாகப் பிரிவினைத்திட்டத்தைப்பலமாக ஆதரிக்கின்றனவாம்.

○ இத்தகைய அபிப்பிராயம் சொல்லும் ஒரு சில அரசியல் வாதிகள் தமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்கட்டுமென்று எண்ணுபவர்களாம்.

○ அவர்களில் மற்றுஞ் சில மௌனசாமிகள் அடுத்த தேர்தலை எண்ணிக்கொண்டு 'ஆ! ஊ!' என்று அலறுகிறார்களாம்.

● அலறிக்கொண்டு திரியும் புத்த பிக்குகள் கும்பலுக்கு ஆட்சிப்பீடம் அமோகமான ஆதரவு காட்டுகிறதாம்.

○ அந்தப் பிக்குகளின் மஞ்சள் அங்கிகளைக் களைவதே எனது முதல் வேலை யென்று முதலமைச்சர் முன்பொரு தடவை சொன்னாராம்.

○ அவர் 1947ஆம் ஆண்டுத் தேர்தல் வெற்றி எக்களிப்பிற் சொன்னதை இப்போது மறந்திருக்கவும் கூடுமாம்.

● மறந்த சொத்து மக்களுக்குதவாதென்பது மணிமொழிகளிலொன்றாம்.

○ மணிமொழிகள் என்ற பெயரிலே சொந்த வாக்கியங்களையும் சேர்த்து மகான் பட்டம் பெறச் சிலர் முயற்சிக்கின்றனராம்.

● சிறுகதை எழுத்தாளன் என்ற பட்டத்தைப் பெற விரும்புபவர்கள் சிலர் தமிழ்ச் சட்டம்பிமாரைத் தம் கற்பனைக்கெட்டியவாறு கிண்டல் செய்வார்களாம்.

○ ஆனால் ஆரம்பவகுப்புப் பாடப்புத்தகக் கதையொன்று அத்தகைய எழுத்தாளர்களின் கற்பனையைப் பார்த்துக் கடகடவென்று சிரித்ததாம்.

○ இக்காலக் கோயபல்ஸ் ஒருவரின் செயலைக் கண்டும் வன்னிப்பகுதி மக்கள் வயிறு வலிக்கச் சிரிக்கிறார்களாம்.

○ அந்தச் சிரிப்பு வாயிலிருந்த தவிட்டையும் அடுப்பிலிருந்த நெருப்பையும் போக்கிவிடுமென்பதை உணர்ந்து நடக்கவேண்டியவர் இன்னொரு பெரியாராம்.

# போலிக் கல்வி

## கடவுளை அணுப்பும் கல்வியே

### வித்தியாதிகாரி சோமசேகரம் அறிவுரை

கடவுளை அணுப்புதற்குக் கற்கும் கல்வி கல்வியாகாது. அது போலிக் கல்வியே யாகுமென வடபகுதி வித்தியாதிகாரி திரு. சி. உ. சோமசேகரம் எம். ஏ. அவர்கள் சாவகச்சேரி வளர்க்தோர் கல்வி மன்றத்தினைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இம் மன்றத் திறப்புவிழா, வடபகுதி வித்தியாதிகாரி திரு. சி. உ. சோமசேகரம், எம். ஏ., அவர்களின் தலைமையிற் சென்ற விஜய தசமித் திருநாளிலன்று நிகழ்வதாயிற்று. தலைவரவர்கள் மன்றத்தலைவரால் மாலைசூட்டப்பெற்று அவையினரால் வரவேற்கப்பட்டனர். மன்ற ஆசிரியருள் ஒருவராகிய சங்கீத பூஷணம் எஸ். விஞசித்தம்பி அவர்கள் தேவாரம் பாடியபின்னர், வித்தியாதிகாரி அவர்கள் முத்தமிழ்ப் பேராசிரியர் அருட்டிரு விபுலாநந்த அடிகளாரின் திருப்படத்திரை நீக்கம் நிகழ்த்திக் கல்வி மன்றத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

தலைவரவர்கள் கல்விமன்றத் திறப்பு, அடிகளார் படத்திறப்பு என்னும் இரு கருமங்களையும் தாம் பெருமகிழ்ச்சியோடு ஆற்றுவதாகக் கூறி, அடிகளாரின் இனிய குணம், செவிக்கினிய செந்தமிழ், பேரறிவு, கல்வித் தொண்டு, சமயத் தொண்டு, துறவினால் ஈழத்துக்கும், தமிழகத்துக்கும் அளித்துள்ள பெருமை என்பனவற்றை அழகாக விளக்கிய பின்னர் 'கல்வியும், வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றி இனியதொரு விரிவுரை ஆற்றினார்கள். அதன் சாரம் வருமாறு:

"ஒருமைக்கட் கற்ற கல்வி எழுமையும்ஏமாப்புடைத்து" என்பதை நாம் உணருதல் வேண்டும்; கற்பன கற்றுக் கற்றாங்கு ஒழுகுதல் வேண்டும். கடவுளை அணுப்புதற்குக் கற்கும் கல்வி கல்வியாகாது. அது போலிக் கல்வியே. உத்தியோகம் ஒன்றனையே கருதிப் படிப்பது படிப்பாகாது. எங்கள் நன் முயற்சியும் நல் எண்ணங்களுமே எமது சூழலுக்குக் கருவியாய் நின்று, புனிதமான சூழலை ஆக்கி எம்மையும் புனிதராக்கும். குறைந்த வேலை செய்து கூடிய சம்பளம் பெறுவது உண்மையான கல்விப்பயனாகாது.

நாம் எல்லோரும் தாயினும் நல்ல நல்ல தலைவராகிய கடவுளின் பிள்ளைகள். இதனை அறிந்து ஒற்றுமையாக வாழத் துணைபுரிவதே கல்வி. ஆத்மலாபமே கல்வியின் நோக்கமாக வேண்டும். கல்வி ஒரு பிறப்போடு ஒழியாது. ஆன்மாவினைத் தொடர்ந்து செல்லும். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் பல பிறவிகளிலும் கற்ற கல்வியின் பயனாகவே உயர்ந்த நிலையினை அடைந்தார்.

உயர்நிலை எய்துதற்கு இறைவன் அருளோடு தன் முயற்சியும் வேண்டும்.

"தானே தனக்குப்
பகைவனும் நட்டானும்
தானே தனக்கு
மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த
வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத்
தலைவனு மாமே"

என்பது திருமூலர் வாக்கு. இதன் கண் உள்ள பொருள் வாழ்க்கைக்கு வழிகாட்டி. வாழ்க்கையின் செவ்விக்குக் கல்வியறிவொழுக்கமும் அன்பும் வேண்டும். அன்பகத்தில்லா வாழ்க்கையும் சமயக் கல்வியில்லாத கல்வியும் பயன் அளியா.

இதன் தொடர்பாக வித்தியாதிகாரி அவர்கள் இங்கிலாந்திலும் மற்றும் மேலைநாட்டிலும் வளர்ந்தோர் கல்வி இயக்கம் நிகழுமாற்றை நன்கு விளக்கினர். மேலும் கல்வித் தொண்டினையே குறிக்கோளாகக் கொண்டு திரு. பீதாம்பரமவர்கள் தொடங்கிய கல்வி மன்றம் வளர்ச்சியுற வேண்டுமென்று ஆசி கூறினர்.

பின்னர் நகரசங்கத்தலைவர் திரு எஸ். இராமநாதனவர்கள் சாவகச்சேரிக்கு இத்தன்மையான கல்வி மன்றம் ஒன்று வேண்டும் என்பதை விளக்கி; ஆசிரியர்க்கும் பிறர்க்கும் நன்றி கூறினர். ஆசிரியர் திரு. பீதாம்பரம் அவர்கள் நன்றிகூறுமுகத்தால் பின்வருமாறு கூறினார்.

"சமய சமூகசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க)



### திரு. சி. நாகலிங்கம்

#### நூற்றாண்டு நினைவு

தமிழுக்கும் சைவத்துக்கும் பலகாலம் தொண்டாற்றி மங்காப் புகழ் பெற்று விளங்கிய பெருமகன் திரு. சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின் நூற்றாண்டுவிழா சென்ற 27-10-55 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்த இலங்கை இந்திய முன்னாள் தூதுவர் திரு. சி. குமாரசுவாமி பிரமதத்தவரின் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் இந்துக்கல்லூரியை நிறுவிச் சமயக் கல்விக்கு அவர் உழைத்ததுபற்றியும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் உயிர்நாடியாக விளங்கியது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

இவ் விழாவில் நியாயவாதி திரு. ஏ. வி. குலசிங்கம், வழக்கறிஞர் திரு. வி. நாகலிங்கம், நியாயவாதி எவி. பொன்னம்பலம், முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். அன்று காலை இறைவழிபாட்டுக்குப் பின்னர் சிறந்த விருந்துபசாரம் நடைபெற்றது.

### சித்திர வகுப்புகள்

தமிழ் ஆசிரியர் வரைதற் தராதரப் பரீட்சை — 1956

ஆங்கில ஆசிரியர் வரைதற் தராதரப் பரீட்சை — 1956

மேற்குறித்த பரீட்சைகளுக்கு உரிய வகுப்புகள் யூனியன் கல்லூரியில் சனிக்கிழமைகளில் நடாத்தப்படும். சேர விரும்புவோர் விபரங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக.

ச. கந்தையா
யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

[A 240—ii]

# திருநெறிச் செல்வர்

## இராமச்சந்திரன் சேவை

### 60ஆவது ஆண்டு நிறைவுவிழா

சமயத்துறையில் ஈடுபட்டு உழைக்கும் அன்பர்களுக்குத் திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் புதியவரல்லர். இலங்கைப் புகையிரதப் பகுதியில் உயர்தர உத்தியோகம் வகிக்கும் இப்பெரியார் 'ஆத்ம ஜோதி' எனும் சமயப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்கள். ஆங்கில அறிவும் தமிழ் அறிவும் நிரம்பப் பெற்றுள்ள திரு. இராமச்சந்திரன் அவர்கள் தமது பத்தொன்பதாவது வயதிலேயே அரசாங்க சேவையிற் சேர்ந்து நாட்டு நலனுக்காகச் சலியாது பணியாற்றி வருகின்றார்கள்.

நயினாதீவில் திரு. கதிரேசு அவர்களுக்கும் திருமதி வள்ளியம்மைக்கும் மைந்தனாகப் பிறந்து சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து ஒழுகிவரும் திரு. இராமச்சந்திரன் அவர்கள் தாய்நாடாகிய இந்தியாவிலும் அங்கு தோன்றியுள்ள தலைவர்கள் சமய சீலர்கள் ஆகியோரிடத்தும் பேரன்பு பூண்டவர்கள். அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஐப்பசி மாதம் 20ஆந் திகதி பிறந்த இப்பெரியார் இன்னும் ஒரு மாணவனைப் போலவே அறிவுத் துறையில் ஈடுபட்டு அவப் பொழுதைத் தவப்பொழுதாக்கி வருகின்றார்கள்.

ஆத்மீக உண்மைகளை அறிந்து ஒழுகுவதற்கு திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு நயினாதீவுச் சுவாமிகள், சுவாமி இராமதாஸ், அன்னை கிருஷ்ணபாய், ஸ்ரீ ரமண மகரிஷி, சுவாமி சிவானந்தர், யோகி சுத்தானந்த பாரதியார் போன்ற தவசீலர்களின் தொடர்பு கிடைக்கலாயிற்று. இப்பெரியார் எவ்வித பயனுங் கருதாது பொதுப்பணியிற் சலியாது உழைத்து வருவது இந்துமத வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதாகின்றது.

கொழும்பு விவேகானந்த சபை, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், திருக்கேதீசுவர திருப்பணிச்சபை ஆகியவற்றில் பங்குபற்றி உழைப்பதுடன் கூட்டுவழிபாட்டையும் நடாத்தி வருகிறார்கள், சமய நூல்களைவெளியிட்டும் கட்டுரைகள் எழுதியும் அரிய விரிவுரைகள் ஆற்றியும் சமய வாழ்வின் சிறப்பினைப் பரப்பிவரும் திருநெறிச் செல்வர் க. இராமச்சந்திரன் அவர்களின் 60 ஆவது ஆண்டு நிறைவுவிழா 1-11-55 செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. அன்று மாலை கொழும்பு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவிற் சண்முக அர்ச்சனை நடைபெற்றது. அன்பர்கள் பலர் இதிற் கலந்துகொண்டனர்.

வழிபாட்டுக்குப் பின்னர் நடைபெற்ற விழாவுக்கு அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. இராமச்சந்திரன் அவர்களிடமிருந்து மக்கள் பெற்ற நன்மைகளுக்கு நன்றி செலுத்துவதற்கான சந்தர்ப்பங் கிடைத்ததை அமைச்சர் குறிப்பிட்டு அன்னாரின் மகத்தான தொண்டுகளை நினைவூட்டினார்கள். 'இந்துசாதனம்' ஆசிரியர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம், திரு. வள்ளியப்பச் செட்டியார் சுவாமி வரானந்தர், சச்சிதானந்த யோகீசுவரர், திரு. வே, அ. கந்தையா, ஆகியோரும் திரு. இராமச்சந்திரன் அவர்களின் அரும் பணிகளைப் பாராட்டினர். திரு. இராமச்சந்திரன் அவர்கள் உளங் கனிந்து பேசும்போது முருகப்பெருமானின் திருவருளே தமக்கு வழிகாட்டியாக நிற்கின்றதெனத் தெரிவித்தார்கள். இறைவன் அன்னாரையும் அவர் தம் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக!

### தமிழ் மறைக் கழகம்

இக் கழகம் நடத்தும் திருக்குறள் மனனப்போட்டிக்கு வேறும் சில பரிசில்கள் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

போட்டியிற் பங்குபற்ற விரும்புவோர் சேர்வுத்தாளையேனும் அதன் பிரதியையேனும் நிரப்பி 50சதத்துக்கு ஓர் அஞ்சற் கட்டளையும் சேர்த்து 1-12-55க்கு முன் செயலாளர் தமிழ்மறைக் கழகம், 18/2 அத்திடியா தெரு, இரத்மலானை என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். வேண்டிய பிறவிபரங்களைத் தமிழ் மறைக் கழகச் செயலாளரிடமிருந்து பெறலாம்.

# ஆளப் பிறந்தவன் யாரடா?

ஆ. இ.

சொல்பெரி நாடக ஆட்சி — தமிழ்ச்
சோதரர் யாவர்க்கும் ஆகாத காட்சி
கால்கொண்டே செங்கோல் ஓச்சி — நமக்
காகாத வேலைகள் செய்யுதே சீச்சீ

எப்படி உட்பிள வேனும் — உள்ளே
எண்ணமொன் றேஅது ஏற்றமுர் தந்தால்
அப்படி யேஒன்றிக் கொள்ளும் — இந்த
அற்புதம் நம்மிடம் இப்போதும் உண்டா?

ஊரைப் பிடிக்கக் கொடுப்போம் — அதன்
உட்கருத் தோரா துறங்கிக் கிடப்போம்
ஏரைச் சுமந்த நிலத்தை — விற்று
இங்கே எத்தரை ஏற்றிக் களிப்போம்

பள்ளித் தலங்களு மேறிக் — "......களம்"
பயிலு மிடமாய்ப் படிப்படி மாறிக்
கொள்ளிப் பறையர் தமிழர் — என்ற
கூச்சல் புறப்பட மூச்சை விடுவோம்

தம்மொழி சாதி சமயம் — இவை
தலையெடுத் தப்புறம் தாங்களே தேசம்

இம்மொழி மந்திர மூலம் — இதை
எண்ணும் தமிழன் இனியா உதிப்பான்!

அடைக்கக் கிடந்தோரை மீட்டோம் — உயர்
அரசியல் ஞான அமுதங் கொடுத்தோம்
இடைத்த பயன் என்ன கொண்டோம் — இன்று
கிளிநொச்சி வயலுக்கு வழிவைக்கக் கண்டோம்

முச்சந்தி முன்னணிப் பேய்கள் — செய்யும்
முறையற்ற செயலுக்குப் பறைதட்டு மூதல்வர்
முச்சங்க மதயானைத் தமிழைக் — கட்டி
மூத்தாடு வேனென்னல் முட்டைக் குளப்பம்

கட்சியின் முட்டை பொரிக்க — அடை
காக்கும்நம் சேவல்கள் கண்ணை விழிக்கா
உச்சாணிக் கொப்பிலும் ஏறு — அதனால்
உண்டே பதவிக் குலைவைக்கும் கண்டம்!

மிச்ச மிருக்கின்ற நாங்கள் — இந்த
வீண்அடை வீரரை விட்டுத் தொலைப்போம்
அச்ச மறுமப்போ தமிழா! — உன்னை
ஆழப் பிறந்தவன் யாரடா? எழடா!

### அறிவித்தல்

தெல்லிப்பழை
யூனியன் கல்லூரிப்
பிரவேசப் பரீட்சை

1. மேற்படி கல்லூரியிற் சேர விரும்பும மாணவர் கல்லூரிக் கந்தோரிலிருக்கும் பிரவேசப் பத்திரங்களில் 1955ஆம் ஆண்டு கார்த்திகைமீ 20ஆந் திகதிக்கு முன் மனுப் பண்ண வேண்டும்.
2. தெரிந் தெடுக்கப்பட்ட மாணவர் 1955ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ஆந் திகதி சனிக்கிழமை வைக்கப்படும பிரவேசப் பரீட்சையில் தோற்ற வேண்டும்.

I. P. துரைரத்தினம்
அதிபர்

தெல்லிப்பழை,
2-11-55.

[A 245]

ஈழகேசரி

சுன்னாகம் மன்மத ஐப்பசி ௨௰

— [illegible] ஆண்டு 26 —

[illegible] இல. 805

# அனுமதி கிடைக்கும்

சுயநலமும் தற்பாதுகாப்பும் தலைதூக்கி நிற்கும் போது நீதியும் தர்மமும் தமக்குரிய நிலையைப் பெற முடியாது ஒதுக்கப்பட்டு விடுகின்றன. தனிப்பட்டவர்களாயினும் சரி சங்கங்களாயினும் சரி இதற்கு விதிவிலக்கல்ல. உலக சமாதானத்துக்காக உழைத்துவரும் மாபெரும் சபைகள்கூட நீதி தர்மம் என்பனவற்றினின்றும் பிறழ்ந்து சுயநலத்தை மேற்கொண்டு விடுகின்றனவென்றால் சிறிய நாடுகளைப் பற்றிப்பேசுவதற்கு என்ன இருக்கின்றது?

ஐக்கிய நாடுகள் சபை உலகில் ஒரு மாபெரும் தாபனமாகும். சமீபத்திற்றான் இச்சபை பத்தாண்டுப் பணியை நிறைவேற்றி உலகத் தலைவர்களின் மதிப்பையும் ஆசியையும் பெற்றுள்ளது. வலிமை மிக்க இச்சபை முக்கியமான சில நாடுகளைத் தம்முடன் சேர்த்துக்கொள்வதற்குத் தயங்குவதுமன்றி, அந் நாடுகளை அடுப்பதில்லையென இதுவரைகாலம் தீர்மானித்து அதற்கான முட்டுக்கட்டைகளையும் போட்டு வருகின்றது.

பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, அல்பேனியா, மங்கோலியா ஆகிய நாடுகள் ஐந்தும் கொம்யூனிஸ்ட் நாடுகள். இவற்றுடன் இலங்கை, பின்லாந்து, அயர்லாந்து இத்தாலி, அவுஸ்திரியா, போர்த்துக்கல், ஜோர்தான், லிபியா, நேர்பாளம், கம்போடியா, லாவோஸ், ஸ்பெயின், யப்பான் ஆகிய கொம்யூனிஸ்ட் அல்லாத 18 நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வேண்டி நிற்கின்றன. பிரிட்டன், கனடாபோன்ற நாடுகள் இவற்றைச் சங்கத்திற் சேர்த்துக் கொள்வதற்கு முன்வந்துழைக்கின்றன. ஆனால் அமெரிக்காவும், ருஷியாவும்சாக்குப் போக்குகள் கூறித் தத்தமக்குப் பிடியாத இந் நாடுகளை ஐ. நா. சபையிற்சேர்ப்பதில்லையென விதண்டா வாதம் செய்து வருகின்றன. இலங்கை 1948ஆம் ஆண்டிலேயே சங்கத்திற் சேருவதற்கு விண்ணப்பம் செய்தது. ருஷியா இதனை வன்மையாக எதிர்த்ததுமன்றி, இலங்கையின் சுதந்திர அந்தஸ்தைப்பற்றியும் சமுசயங்கொண்டது!

இவ்வாறு ருஷியா நடந்துகொள்வதற்குக் காரணம் ஐ. நா. சபையில் அமெரிக்காவின் ஆதிக்கம் தலைதூக்கக் கூடாதென்பதற்கேயாகும். ஆகவேதான், அமெரிக்காவின் பண உதவியையும், ஆதரவையும் பெற்று அந் நாட்டின் தாசானுதாசர்களாக இருந்து வரும் நாடுகளை ஐ. நா. சபையில் அணுகத்தானும் விடாது; தனது 'தள்ளுபடி' அதிகாரத்தை உபயோகித்து அந் நாடுகளைப் புறத்தே ஒதுக்கி வருகின்றது. இவ்வாறே கொம்யூனிஸ்ட் நாடுகளைச் சபையிற்சேர வொண்ணாது அமெரிக்காவும் தனது அதிகாரத்தைத் தாராளமாகப் பயன்படுத்தி வருகின்றது.

எதிரிக்குப் பக்க பலம் கிடைக்கக் கூடாதென்ற நய வஞ்சகச் செயல்கள் சிறிய நாடுகளின் உரிமைக்கு உலை வைத்துவிடுகின்றன. இத்தனைக்கும் உலகை அடக்கியாளும் ஆசைதான் அடிப்படைக்காரணமாகும்.

உலகின் நற்காலம் போலும் இப்போது அமெரிக்காவினதும் ருஷியாவினதும் அழுங்குப் பிடி தளர்வதைக் காண்கிறோம். எனவே, இவ்வருட இறுதியில் முற்கூறப்பட்ட 18 நாடுகளும் ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெறுமென நம்புவதற்கான சூழ்நிலை உண்டாகிவருகின்றது. கானடா சமர்ப்பிக்கவிருக்கும் இப்பிரேரணையை ஐ. நா. சபை ஏகமனதாக ஏற்குமாயின் இலங்கையும் ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெற்று; சுதந்திர நாடுகளின் மதிப்பையும் பெறுவது நிச்சயமாகிவிடும்.

## மின்சார வெளிச்சம்

### அணைவதாற் பெருந் தொல்லை

யாழ்ப்பாணம் 3-11-55

யாழ்ப்பாண நகரில் அடிக்கடி மின்சார வெளிச்சம் அணைவது ஒரு நீண்டநாட் தொல்லையாக இருந்து வருகிறது. இதுபற்றி நகரசபை எவ்வித நடவடிக்கையும் எடுத்து நிவாரணம் தேட முயற்சிக்காதது பற்றி மக்கள் வியப்புறுகின்றனர்.

முக்கியமாகப் பெரிய கடைச் சந்தைப் பகுதியில் இரவு வேளையில் வெளிச்சம் திடீரென்று அணைவதும் சில நிமிடங்களின் பின் எரிவதும் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகக் கணப்படுகிறது. அங்குள்ள மின்சாரக் கம்பி இணைப்பில் ஏற்பட்ட கோளாறுதான் இதற்குக் காரணமெனத் தெரிகிறது இதுபற்றி அங்கு கடை வைத்திருப்பவர்கள் பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் பயனெதுவும் கிடைக்கவில்லை. இவ்விதம் அடிக்கடி வெளிச்சம் அணைவதால் திருட்டுக்கள் நடப்பதாயும் அவர்கள் புகார் செய்கின்றனர்

இது போன்றமின்சாரக் கோளாறு வல்வெட்டித் துறைப் பட்டினத்திலும் இடையிடையே தலைகாட்டுவதாகத் தெரிகிறது அங்கு புதிய தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் மெழுகு திரிகள்தான் கைகொடுத்து உதவின என்பது மிக வேடிக்கையான சம்பவமாகும்.

தேவை

தமிழிலே பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை. சைவசமய அறிவுடன் சங்கீத, நடன அறிவும் உடையவர் விரும்பப்படுவர். நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விடுதி வசதி உண்டு.

முகாமைக்காரர்
கந்தசாமி வித்தியாசாலை,
மாத்தளை

[A 239 — ii]

# பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

“கட்டிய மனைவி சற்றே ஏறுமாறாக நடப்பாளேயானாற் கூறுமற் சன்னியாசங் கொள்” எனத் தமிழ் இலக்கியம் போதிக்கின்றது. இதற்கேற்பச் சிலர் சடாமுடியும் தாடியும் வைத்துக் கமண்டலங் கையிலேந்திக் கானகம் புகுந்து கடுந்தவஞ் செய்து காய்வதுண்டு. வேறு சிலர் கோடேறி விவாக முறிவுசெய்து வேறோர் இளம் பெண்ணைக் கடிமணம் புரிந்து காதல் நாடகம் நடாத்துவதுமுண்டு.

பக்கிங்ஹாம் அரண்மனையின் மெய்க்காவலர்களில் ஒருவரான குரூப் காப்டன் டவுண்செண்ட் என்பவர் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர். சென்ற மகாயுத்தத்தின்போது இலண்டன் மாநகரைக் காப்பாற்றிய விமானப்படையிற் புகைபறக்கப் பணியாற்றிய இவ் வீரனுக்கு ஒரு மனைவியும் இரு குழந்தைகளும் உளர். மனைவி சற்றே ஏறுமாறாக நடந்ததைக் கண்டு 'வியாபாரம்' பல்கிப் பெருக முன்னர் விவாக முறிவு செய்துகொண்டார் அவர்!

சுடுகண்ட பூனை அடுக்களையை அணுகாதென்பர். ஆனால் குரூப் கப்டன் அரண்மனையில் இளவரசி மாக்ரெட் அவர்களின் அணைவைப் பெற்றிருந்த காரணத்தினாற் போலும் அம்மாதரசிமீது காதல் கொண்டுவிட்டார் இரு வருடங்களுக்கு முன்னர் அரும்பிய இக் காதல் மலர்ந்து உலகப் பத்திரிகைகளில் எல்லாம் நறுமணம் வீசியது. மணம் வீசியதுடன் நின்றுவிடாமல் இக் காதல் நன்கு கனிந்துவிட்டது. பின்னர் அது அழுகி நாற்றமெடுக்க முன்னர் கப்டன் டவுண்செண்ட் என்பவரை மணக்கப் போவதில்லை என்று தாம் முடிவு செய்துவிட்டதாக உலகிற்கே அறிவித்துவிட்டார் இளவரசி.

மாகரெட் செய்துகொண்ட இம் முடிவுக்குக் குரூப் கப்டன் தமது முழு ஆதரவையும் அளித்துள்ளார்.

உலகப் பிரசித்தி பெற்ற இக்காதல் நாடகம் எதிர்பார்த்ததுபோல் எதிர்பாராத வகையில் முடிவடைந்து விட்டது. இளவரசி தனது காதற் கண்ணாளனைக் கைப்பிடிக்க பெரிதும விரும்பினாள். ஆனால் சட்டமும, சமுதாயமும், மத குரவரின் சர்வாதிகாரமுங் குறுக்கிட்டு மாசற்ற காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன.

காதல் பெரிதா? கடமை பெரிதா? என்ற இரு பெருங் கேள்விகள் 25 வயது நிறைந்த இளவரசியை ஆட்டி அலைத்தன. ஈற்றில் அரச குடும்பத்துக் குரித்தான கௌரவமுங் கடமையுமே பெரிதெனக் கருதித் தமது காதலைத் தியாகம் செய்துவிட்டு வாடிய மலர் போலானார்.

காதலனும் காரில்ஏறி கனவிசையாகச் சென்று விட்டான். நாடகம் முடிந்துவிட்டது. ஆனால் காதலர்களின் உள்ளங்களிற் குமுறும் உணர்ச்சிப் புயல் அடங்கி ஒடுங்குமா என்பதுதான் கேள்வி.

ஓ!

### 'காதல் போயிற்........

'காதல் காதல் காதல், காதல் போயிற் காதல் போயிற், சாதல் சாதல் சாதல்' என்று சொல்லி இளவரசியும் அவர் தம் காதலனும் நல்ல வேளையாக தெம்ஸ் நதியிற் குதித்து உயிரைப் போக்கி விடவில்லை, பாரதியார் பிரிட்டன் பக்கம் தலை காட்டாதிருந்தபடியாற்றான் இக் காதலர்கள் தப்பிப் பிழைத்தார்கள் என்பாருமுளர். ஆனால் இத் தியாகிகளின கடிதங்கள் பிரிட்டனிலுள்ள பத்திரிகைகளுக்கு அகப்பட்டால் அவர்கள்பாடு வேட்டைதான். அவற்றை வைத்துக்கொண்டே காகியால பதிற் கயிறு திரிக்கலாம்!! போட்டிகளும் ஏற்படுத்தி மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கும் சுவை யூட்டலாம். ஆனால், இதற்கு பிரிட்டிஷ் சட்டம் இடங்கொடுக்குமா என்பதுதான் கேள்வி.

## போலிக் கல்வி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியே சால்புடைத்து, அடிகளார் கூறியவாறு குருகுலக் கல்விமுறையே விழுப்பம் தருவது. தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றி வரும் தலைவர் அவர்கள் கூறியவாறு அன்பை வளர்க்கும் கல்வியே கல்வி, அடிகளாருடனிருந்து பழகிய வழக்கமே என் உள்ளத்தில் இப்பணியை ஆற்ற ஏவியது. ஆதலினாலேயே அவருடைய நினைவோடு இக் கல்வி மன்றத்தை ஆரம்பிக்க எண்ணினேன். எங்கள் தலைவரின் அன்பும், நகர சங்கத் தலைவரின் உதவியும், அன்பர்களின் ஒத்துழைப்பும் உண்டேல் இறைவனருளால் இக் கலைமன்றம் பயன் தரும் நிலையம் ஆகும். என் ஆசிரியரும் எங்கள் ஊரவரும் ஆகிய பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களின் நினைவாக, இம் மன்றத்தின் சார்பில் ஒரு நூல் நிலையத்தினையும் வாசிகசாலையினையும் நிறுவ ஆவலுடையேன். விரைவில் அங்ஙனஞ் செய்ய அன்பர்கள் துணைபுரிவார்களாக.”

வளர்ந்தோர் வகுப்பு புதன், வெள்ளி, சனி, ஞாயிறு, வாரங்களில் இரவு 6-30 முதல் 8-30 வரை நடத்தப்படுகின்றது.

## கல்லடி-உப்போடையிற்

### கலைமகள் விழா

கல்லடி-உப்போடை விவேகானந்தா வித்தியாலயத்திற் கலைமகள்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 24-10-55 மாலை மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் தேவியின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது. ஊர்வலத்தின் போது இராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் முகாமைக்காரர் சுவாமி நடராஜானந்தர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பாடசாலைத் தலைவி திருமதி. வி. சாரதாதேவி அவர்கள் புதுமாணவர்கட்கு வித்தியாரம்பம் செய்து வைத்தார்கள்.

கடிதம்

# சுகாதாரக் கல்வி

## அரசினர் காட்டும் ஊக்கம்

### திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் சேவை

சுகாதாரக் கல்வி சிறப்புற்றோங்கி நாடெங்கணும் பரவ வேண்டுமென்ற நோக்குடன் இலங்கைச் சுகாதாரப் பகுதியினர் இந் நாட்டிலுள்ள 15 சுகாதாரப் பெரும்பிரிவுகளுக்கு ஒவ்வோர் சுகாதாரக் கல்வி உத்தியோகஸ்தர்களை இம் மாதம் தொடக்கம் நியமித்துள்ளனர். உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கைக்கு அனுப்பப்பெற்ற சுகாதாரக் கல்வி நிபுணர் டாக்டர் சேஷர் அவர்களின் மேற்பார்வையிற் குறித்த உத்தியோகஸ்தர்கள் இரு மாத காலம் சிறப்புப் பயிற்சிபெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பெரும் பகுதிக்குத் திரு இ. தர்மலிங்கம அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். திரு. தர்மலிங்கம் அவர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் திறமையுடன் பணியாற்றியுள்ளார்கள். அவர்களின் சேவையைப் பாராட்டி இலங்கை வைத்திய சுகாதார சங்கம் அவர்களுக்குத் தங்கப் பதக்கத்தை அளித்தது. 1952ல் இவரால் நடத்தப்பெற்ற சுகாதாரப்பொருட்காட்சியை மகா தேசாதிபதி சோல்பரிப்பிரபு அவர்கள் திறந்துவைத்துப்பேசியபோது, அத்தகைய ஒரு காட்சியை இந்த நாட்டில் தாம் முன்னர் பார்த்ததில்லை யெனக் கூறியிருந்தார்கள்.

திரு. தர்மலிங்கம் அவர்கள் அகில இலங்கைச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் நிர்வாக சபை அங்கத்தவராகச் செவ்வனே பணியாற்றியுள்ளார்கள். சுகாதார சங்கத்துக்கு அவர்கள் சமர்ப்பித்த 'கிராமச் சுகாதாரம்' என்னும் கட்டுரை அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இவ் அறிஞர் தமது ஓய்வுநேரத்தை நன்கு பயன்படுத்திப் பல பாட புத்தகங்களைத் தமிழில் ஆக்கி அரும்பணி செய்து வருகின்றார்கள்.

# நீரினால் அழியாத் தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கிராமத்து மக்களிற் பலர் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

### உழவர் செல்வம்

சென்ற ஒருமாதமாக இங்குள்ள கால் நடைகளுக்கு நோய் காணப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வயல்களை வளம் செய்து புகழ்ந்த பெருமையில் உழவர் தம் செல்வமான மந்தைகளுக்கே பெரும் பங்குரியது. இயந்திர மூலம் உழவு விதைப்புகளும், போரடுதலும் நடந்தாலும் தமது பழஞ் செல்வமான மந்தைகளைக் கண்ணுங் கருத்துமாகப் பேணுதலை இங்குள்ள உழவர் மறந்திலர். இதனைக் கமக்காரர் வாயிலெல்லாம் சில நாட்களாக இதே பேச்சாயிருந்தது. ஆயினும் இங்குள்ள மிருகவைத்தியர்கள் வேளையறிந்து இந் நோய்களுக்கான தடைவேலைகளைக் கைக்கொண்டு அழிமதியினைக் குறைத்துள்ளனர். நாம் அறிந்தபடி இதுபரியந்தம், கால்நடைகள் சுமார் ஆயிரத்து நானூறு வரை குளை நோய், வாய்நோய், மாட்டுக்காய்ச்சல் முதலியனவற்றால் இறந்திருப்பதாகவும், ஏறக்குறைய இருபதினாயிரம் ஆடுமாடுகள் ஊசி மூலம் மருந்தேற்றப்பெற்றுள்ளதாகவும் தெரிகிறது, ஒரூரிலிருந்து இன்னோரூருக்கு மந்தைகளைக் கொண்டு செல்லாவாறு மறிப்புகளும் இங்கு போடப்பட்டுள்ளன. இவற்றால் நோயின் கொடுமை குறைந்துவருவதாக மிருகவைத்தியர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை மக்களுக்கு ஆறுதலளித்திருக்கின்றது.

## 'ஈழத்துப் பேறுமன்னர்கள்'

**பேராசிரியர் க. ச. அருள்நந்தி அவர்கள் 'ஈழகேசரி' ஆசிரியருக்கு எழுதுவதாவது:**

ஈழகேசரி 16–10–55 இதழைக் கண்டதும் அதனை வழக்கம்போல் படித்தேன. ஈழத்துப் பேறுமன்னர்கள் என்னும் தலைப்பின் கீழ் மா. பீதாம்பரம் அவர்களைப் பற்றி ஆங்குக் கூறப்பட்டுள்ளனவற்றை எல்லாம் பற்றுடன் வாசித்தேன்.

இற்றைக்கு ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னர் யான் வட பெரும்பகுதித் தலைமை வித்தியாதரிசியாக இருந்த காலத்து விடுத்த அழைப்பை ஏற்றுப் பலர் அனுப்பிய பாடல்களுள் சிறந்தனவற்றைத் தெரிந்தெடுத்துப் புத்தக வடிவமாக அச்சிறுவித்து வெளிப்படுத்துவதற்காகவும் மிகச் சிறந்தனவற்றுக்குப் பரிசுகள் வழங்குவதற்காகவும், தங்கள் பத்திரிகையிற் கூறப்பட்டிருப்பது போல், குழுவொன்றை அமைத்தேன். அக்குழுவின் அங்கத்தினருள் இருவருடைய பேர்களைக் காணகிலேனாதலினால் இதைத் தங்களுக்கு எழுதுகின்றேன். இருவரும் இவ்வாழ்வை நீத்து மறைந்து போயினர். ஒருவர் என்னுடைய ஆசிரியராக இருந்து பின் என்னுடன் வித்தியாதரிசியாக விளங்கிய மும்மொழிப் பண்டிதர் ஜே. வி. சதாசிவஐயர் அவர்கள். என்னுடன் இத்தொண்டில் அவர்கள் எடுத்துக்கொண்ட பங்கு பெரும் பங்கு. மற்றவர் தமிழர் செய்த தவப்பயனாய் வந்துதித்துப் பன்மொழி அறிவும், தீவிர உளவாற்றலும், தமிழ்ப் பெரும் பற்றும் விளங்கத் தமிழன்னைக்கு அரிய தொண்டாற்றிய கத்தோலிக்கசுவாமிகள் ஞானப்பிரகாசர் அவர்கள்.

இன்னுமொன்று 1920ஆம் ஆண்டு நிகழ்ந்த என் விவாகத்துக்கு அழைப்பிலா அழைப்பாகச் செய்யுள் ஒன்றை விவாகம் அடக்கமாக நிகழும் மன்மார வாழ்த்துக என்னும் பொருள் அமைய, இயற்றிப் பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பியிருந்தேன். அவ்வழைப்பைப் பெற்ற சாவகச்சேரி வாசியாகிய நண்பர் ஒருவர் வாழ்த்துத் தந்தியொன்று அனுப்புவதற்காக அவ்வூர்த் தபாற்கந்தோருக்குப் போயிருந்தனர். ஆங்கப்பொழுது பீதாம்பரம் அவர்களும் சமூகமாயிருந்தார்கள். இருவரும் கலந்து பேசினர், அப்பொழுது பீதாம்பரம் அவர்களுக்கு வயது பதினெட்டளவு என்பது எனது உத்தேசம். நின்ற நிலையில் செய்யுள் ஒன்றை இயற்றிக் கொடுத்தனர். அதுவே தந்திமார்க்கம் நண்பரிடமிருந்து எனக்கு வந்த வாழ்த்து. அச்செய்யுள் பின்வருமாறு:–

மங்கல முழவம் விம்ம
மஞ்சன மீது யோக
மங்கலம் பொலிந்து மாது
சகுந்தலா தேவி யர்க்கு
மங்கல நன்னாண் பூட்டி
மனமகிழ் சிறந்தே சர்வ
மங்கலம் பொலிந்து வாழ
வள்ளலார் அருள்க
மன்னே.

இச்செய்யுளின் இனிமை, பொருள், பொருத்தம் என்னும் இவை மூன்றும் இளம்பராயத்தே மலர்ந்த அவர்களது புலமையின் இயற்கை யழகையும் உளப்பண்பின் உயர்வையும் விளக்குகின்றன என்பது வெளிப்படை. யாவும் வல்ல இறைவனருளால் எல்லா நலன்களும் உண்டாகப் பல்லாண்டிப் புவியில் அவர்கள் வாழ்க.

# இசைக் கலை வளர்ச்சி

**நமது நிருபர்**

பேசும் படங்கள் மூலம் புகுந்த டப்பா சங்கீதம் இசைக் கலையைக் கொலைசெய்யக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே கர்நாடக சங்கீதத்துக்கு இன்றும் தனிமதிப்பு இருந்துதான் வருகிறது. அதனை வளர்ப்பதில் அரும்பாடுபட்டவர்களில் ஒருவரான புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களைக் கௌரவிக்கக் கலையார்வமுள்ள பலர் முன்வந்திருப்பது இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

இவ்விதம் கலையார்வம் கொண்டு உழைத்து வருபவர்களில் வயலின் வாத்திய விற்பன்னரான திரு. எஸ். செல்வத்துரையும் குறிப்பிடத்தக்கவர். அவர் தம் முயற்சியால் உரும்பராயில் சங்கீத பாடசாலையொன்று நன்கு நடைபெற்று வருகின்றது.

இச் சங்கீத பாடசாலையானது 1953ஆம் ஆண்டு நவராத்திரி தினத்தன்று ஆரம்பமாகி இன்று ஆண்களும் பெண்களுமாக 45 பேருக்கு இசைக்கலையறிவை ஊட்டி வருகிறது. வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம் என்பன அவற்றிலே திறமை வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கப்படுவதாகவும் தெரிகிறது. ஆண்டு நிறைவு விழாவுக்குச் சென்ற 28–10–55இல் தலைமை வகித்த திரு. எஸ். ஸ்ரீநிவாசன் (உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபர்) ஈழத்தின் இசைக்கலை பற்றியும், இசைக்கலைஞர்களினதும் இரசிகர்களினதும் மனப்பான்மை குறித்தும் தெரிவித்த கருத்துக்கள் ஊன்றி உணரத்தக்கன.

இசைக்கலையானது வளர்வது ஒருபுறமிருக்க இரசிக்கும் கலை எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதென்று பார்த்தால் அது வெட்கப்படக்கூடிய காரியமாகவேயிருக்கிறது. கச்சேரி ஆரம்பித்த சிறிது நேரத்துக்கிடையில் அலுப்புத் தட்டியவர்கள் போல வெளியேறுவதும் சில்லறைப் பாட்டுக்களை எதிர்பார்த்துச் சீட்டெழுதி அனுப்புவதும், அருவருக்கக்கூடியனவாகும். சமீபத்தில் நிகழ்ந்த ஒரு பிரபல பாடகரின் கச்சேரியின் போது இடைநடுவே ஒருவர் எழுந்து மிருதங்கச் சமா, மிருதங்கச் சமா என்று கூச்சலிட்டது இன்னும் காதைக் குடைகிறது. இந்நிலை மாறுதவரை கலை வளருமென எதிர்பார்க்க முடியாதாகின்றது.

### கலைஞனுக்குப் பொற்கிழி

யாழ்ப்பாணத்தில் இசைக் கலையை வளர்ப்பதிற் பல்லாண்டுகளாக அரும்பாடுபட்டு வருபவரான மகாவித்துவான் எஸ். என். சோமசுந்தரம்பிள்ளை அவர்களைக் கௌரவித்துப் பொற்கிழி வழங்க ஆவன செய்துவரும் நாகலிங்க சங்கீதநிலையத்தினர் சென்ற 29–10–55 சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஒரு சங்கீதவிழாவை நடத்தினர். இவ்விழாவுக்கு மாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் தலைமை தாங்கினர்கள்.

திரு. சோமசுந்தரத்தின் முக்கிய மாணவர்களில் ஒருவரான திரு. சி. செல்வத்துரை தாமே இயற்றிய உபசாரப் பாக்களைப் பாடி இன்னிசை நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்ச்சிகளில் திருவாளர்கள் கே. வி. தம்பு, பி. எம். வேதநாயகம், இ. சுப்பையா, டி. மூத்தக்குட்டி, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோர் உட்பட அனேகர் பங்குபற்றினர், கலையரசு திரு. கே. சொர்ணலிங்கம் அவர்களின் சகுந்தலை நாடகமும் மிகவும் சுவையாக அமைந்திருந்தது. இவ் விழாவுக்கு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து அனேக பெரியார்கள் சமூகமளித்து கலைஞர் சோமசுந்தரம் அவர்களைக் கௌரவித்துச்சென்றனர்.

### வைத்தீசுவர வித்தியாலயத்தில்

நவராத்திரி வைபவகாலத்தை முன்னிட்டு நகரில் இரு இசையரங்குகள் நடைபெற்றன. வண்ணை வைத்தீசுவரவித்தியாலய [illegible]மாணவர்சங்கம் ஏற்பாடு செய்த இசைவிழாவானது 22–10–55 சனிக்கிழமை தொடக்கம் மூன்றுதினங்கள் நடைபெற்றது. இதில் ஈழத்து இசைக் கலைஞர்கள் பலர் பங்குபற்றினர், விழாவின் முதல்நாளன்று கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் நிகழ்த்திய வரவேற்புரை கலைஞர்களுக்குக் கைகொடுத்துதவும் வகையிலமைந்திருந்தது.

### பரமேசுவரக் கல்லூரியில்

பரமேசுவரக்கல்லூரி நுண்கலைக் கழகத்தின் இன்னிசை விழாச் சென்ற 16–10–55 தொடக்கம் 21–10–55 வரை நடைபெற்றது. இவ் விழாவிற் சங்கீதக்கச்சேரிகளுடன் நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. கிராமிய முறைப்படி நடந்த "பட்டினத்தார்" நாடகம் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாக விளங்கியது.


## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 4661ஆம் இலக்க வழக்கில் 1955ஆம் ௵ புரட்டாதி மீ 15ஆம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி, கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1955ஆம் ௵ மார்கழி மீ 12ஆந் ௳ திங்கட்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பின்னுற் காணும் ஆதன டாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**விபரம்**

கரவெட்டி மேற்கு
குமாரசாமிக் குருக்கள் சந்தணக் குருக்கள்
வழக்காளி

கரணவாய் வடக்கு
1. கார்த்திகேசர் கந்தையா கைம்பெண் தெய்வானை
2. கந்தையாமகள் இரத்தினம்

எதிராளிகள்

**அறவிடவேண்டிய தொகையின் விபரம்**

முதலும் வட்டியும் சித்தாரித்தபடி ரூபா 2400. 23-11-54 தொடக்கம் 20-1-55 வரைக்கும் 10 வீத வட்டிப்படி ரூபா 12-50. 20-1-55தொடக்கம்31-1-55. வரைக்கும் வட்டி ரூபா 65. கோட்டுச் செலவு ரூபா 233-90. மொத்தம் ரூபா 2711-40.சதம்.

**ஆதன டாப்பு**

1. கரணவாய் வடக்கிறை சாண்டா சந்தை, ஏறக்குறைய நிலப்பரப்பு 8. எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, வேலுப்பிள்ளை அருணாசலத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, அருணாசலம் பெண் சின்னச்சிப் பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, கணபதிப்பிள்ளை பெண் பாறுபதிக்குடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகளில் வடகிழக்கு மூலையில் இருக்கும் கடைக்கட்டிடமும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

2. கரணவாய் கவிண்டிற் குறிச்சியிலை கோணசீமா, வீடு 1உம் நிலப்பரப்பு 46உம். இதில் ஆட்சிப்படி வடமேற்குப்புறமாக $\frac{1}{2}$ பங்குக்கு நிலப்பரப்பு 15, குளி 14. இது உலாந்தாக் கணபதிப்பிள்ளையால் 2-12-1929இல் 5374ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 24489ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைபட்ட படத்தின்படி நிலப்பரப்பு 13, குளி $1\frac{20}{32}$. இதில் இரண்டாம் துண்டுக்கு நிலப்பரப்பு 4 குளி $4\frac{22}{32}$. எல்லை: கிழக்கு, அம்பலவி இளையதம்பிக்குடைய ஆதனம். வடக்கு, ரோட்டு. மேற்கு, அம்பலவி ஐயம்பிள்ளைக்குடைய ஆதனம். தெற்கு, பொதுப் பாவிப்புக்காக விடப்பட்ட ஒரு ஒழுங்கை. இதில் சொறியலாய் $\frac{1}{6}$ பங்கும் தென்மேற்குப் புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

3. கரணவாய் கொற்றுவற்றை குறிச்சியிறை நாவலந்தெணி தோட்டம். ஷை நிலப்பரப்பு $12\frac{1}{4}$. ஷை திருவாதெணி நிலப்பரப்பு 36. இதில் வடக்காகப் போகும் ஒழுங்கைக்கு கிழக்குப் புறமாக நிலப்பரப்பு $11\frac{1}{2}$உம் 1ஆம் 2ஆம் பிரிவுகளும் கூடிய நிலப்பரப்பு 61, குளி $1\frac{1}{2}$. எல்லை: கிழக்கு, ஒழுங்கை, வடக்கு, சுப்பன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு, கந்தையா இராசையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, சுப்பர் ஆறுமுகத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{1}{18}$ பங்கும் கிணறுகளில் இதற்குரிய பங்கும்.

4. ஷை இறை. திருவாதெணி நிலப்பரப்பு $11\frac{1}{2}$. எல்லை: கிழக்கு ஒழுங்கை. வடக்கு, சுப்பன் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, கந்தையா இராசையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, சுப்பன் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{18}$ பங்கும் இதற்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும்.

5. ஷை இறை திருவாதெணி. நிலப்பரப்பு 36. எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, சுப்பன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, கந்தையா இராசையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, சுப்பர் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{18}$ பங்கும் இதற்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு 1-11-1955

[A 244]


### வண்ணை நாவலர் பாடசாலை
**சைவ சித்தாந்த வகுப்பு**

இவ் வகுப்பு 25–10–55 விஜயதசமியன்று பிற்பகல் 5மணிக்கு நாவலர் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



### அமுதமொழி

உண்மையைக் கண்டு ஆத்திரப் படக்கூடாது. அப்படி ஆத்திரப்படுவது உமது பலவீனத்தைத் தான் காட்டுகின்றது.

பரமஹம்ஸர்

### சென்னையிற் கம்பர் மகாநாடு
### குடியரசுத்தலைவர் ஆரம்பித்து வைப்பார்

கம்பரின் புகழைப் பரப்பும் நோக்கமாகக் கம்பர் கழகம் சென்ற 1943இல் ஆரம்பிக்கப் பெற்றது. இவ்வாண்டு நவம்பர் 14, 15ஆம் திகதிகளிற் சென்னை வாணி மஹாலில் எட்டாவது மகாநாடு நடைபெறும்.

முதனாட் காலையில் மகாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் டக்டர் இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

### நெடுந்தீவில் கலைமகள்விழா

நெடுந்தீவு அரசினர் பாடசாலையில் சென்ற 25–10–55 இல் இந்து இளைஞர் கழகச் சார்பில் கலைமகள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மத்தியானம் கலைமகள் பூசை சிறப்புற நடைபெற்றது. மாலையில் மாணவர்கட்கும் பிறருக்கும் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் மாணவர்கள் வெற்றிபெற்றனர்.

இரவு பாடசாலை அதிபர் திரு வி. வி. ஈ. நவரத்தினசிங்கம் தலைமையில் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் ச. இராமசாமி, வித்துவான் க. ந. வேலனுர் ஆகியோர் பாடசாலையின் இந்து இளைஞர் கழகத்தாரின் அழைப்பையேற்று விரிவுரை ஆற்றினர். சமயக்கல்வியின் அவசியம் சமயக் கொள்கைகள், ஆலயவழிபாடு, சமயக்கட்டும் பாடசாலையில் சமசந்தர்ப்பம் கொடுத்து சமயப் பண்பாட்டில் மாணவரைப் பயிற்றிவரும் முறை, இவ்வகையில் தலைமை ஆசிரியரின் அயரா முயற்சி, மாணவரின் சமய பேதமற்ற நேசபான்மை, ஒத்துழைப்பு என்ற அம்சங்கள் அன்னாரின் சொற்பொழிவுகளிலும், அதிபர் முன்னுரை, பண்டிதர் கா. கந்தையாவின் வரவேற்புரை ஆகியவற்றிலும் விசேடமாக எடுத்து விளக்கப் பட்டன. கழக அறிக்கை செல்வன் வ. குமாரசுவாமியால் வாசிக்கப்பட்டது.

கிராமச் சங்கத் தலைவர் திரு ச. நாகேந்திரர் சமய பாடப் பரீட்சையில் சித்தி பெற்றோருக்குப் பரிசில்களையும், [illegible] பத்திரங்களையும் வழங்கினர்.

பின் '[illegible]' "தளபதி [illegible]" என்ற பக்தி, வீரம், கடமை, காதல் ததும்பிய நாடகங்கள் மாணவர்களால் அற்புதமாக நடிக்கப்பட்டன.

இவற்றுக்கான அழகிய திரையை ஆக்கிக்கொடுத்த அயல்பாடசாலை மாணவன் ரி. சுவாம்பிள்ளைக்கும் பரிசில் வழங்கிப் பாராட்டினர். கழகப் போசகர் க. செல்லையா ஆசிரியரால் நன்றி கூறப்பட்டது. [illegible]


### தேவை

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு ஒரு காவற்காரர் உடனே தேவை. கல்லூரி அதிபர்க்கூடாக முகாமைக்காரருக்கு விண்ணப்பம் அனுப்பவும்.

ரி. முத்துசாமிப்பிள்ளை
முகாமைக்காரர்

[A 246]

# மாடிப் பேச்சு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தானின் மீது அவளுக்கு அவ்வளவு இலகுவில் காதல் வந்துவிடவில்லை. இருந்தும் அவளுக்கு உள்ளூர ஒரு வேதனை; இனந் தெரியாத தவிப்பு!

வேப்பங் காயிலேயும் தேன் சுவைக்கக் கூடிய தத்துவத்தை ஆதர்சப்படுத்த பணக்காரர்களுக்குத் தான் எண்ணற்ற சாதனைக் கருவிகள் இருக்கின்றனவே. அந்தப் பார்வை, அந்தப் பல் இளிப்பு, அந்த ஆங்கிலம் இவை எல்லாம் அம்பிகையின் மூளையைக் கலக்கி...... ஐயோ கடைசியில் அவளுக்கும் அந்தப் பாழும் காதல் வியாதி வந்தே விட்டது!

உள்ளூரில் உள்ள பரீட்சைகள் யாவையும் முடித்துக்கொண்டு மாணிக்கவேலர் வெளிநாடு செல்ல முடிவு செய்திருந்தார். ஆம் அந்த நாளும் கடைசியில் வந்தே விட்டது!

அம்பிகை கண்ணீர் விட்டாள். நீண்ட ஐந்து வருடகாலம் காதலனைப் பிரிந்திருப்பதென்றால் கண்ணீர் வராமல் வேறென்னதான் செய்யும்! அழுதுதான் என்ன பயன். தேன் சுவைத்த வண்டு மலரை விட்டுப் பிரியும்போது "ஐயோ பாவம் அதன் மென் இதழ்கள் வாடிவிடப் போகிறதே" என்று கவலைப்பட முடிகிறதா? கடைசியில் மாணிக்கவேலர் கப்பல் ஏறியேவிட்டார்.

நாளுக்கொரு கடிதம் மாதத்துக்கொன்றாக்கிக் கடைசியில் வருடம்வரைக்கும் வந்து பின்பு நின்றே விட்டது. கடிதந்தான் வரவில்லை என்பதற்காகக் காலந்தான் காத்திருக்குமா?

ஐந்து வருடங்களுக்குப் பின்பு மேல்நாட்டிலிருந்து பட்டதாரியாக வந்து சேர்ந்த மாணிக்கவேலருக்கு விருந்துகள் உபசாரங்கள் அப்பப்பா!

விருந்துகள் கேளிக்கைகள் முடியுமவரைக்கும் அம்பிகை காத்திருந்து பார்த்தாள்; தன்னிடம் வந்து விடுவார் என்று ஏங்கினள். கடைசியில்.........

"என் வீணாக ஏங்குகிறாய்? நீ பேசுவது காட்டுமிராண்டிப் பாஷை; வெறும் தமிழ். நீ உடுப்பது பதினாறு முழச் சேலை. நீ கட்டுவது கோடாலிக் கொண்டை ஆகவே உனக்கும் எனக்கும் எத்தனை தூரம்! உன்னைப்போல ஒரு வாலிபன் உன்னை மணந்துகொண்டால்தானே உனக்கும் நல்லது"

அவன் கண்ணீர் கொட்டி எழுதிய கடிதங்களுக்கெல்லாம இந்த ஒரே பதில்தான கிடைத்தது.

இந்த மின்வேகத் தாக்குதல் அவள் எதிர்பார்க்காதது. அன்றைய இருளின் போர்வை கிழிவதற்கிடையில் அந்தத் தமிழ்ச்சிக்கு கொல்லைப்புறக்கிணறு விடுதலை தந்தேவிட்டது.

அம்பிகை செத்துப்போய் விட்டாள். அதனால் மாணிக்கவேலருக்கென்ன. சில நாட்களுக்குள் அவர் திருமணம் செய்துகொண்டார்.

கணவனை விவாக முறிவு செய்துவிட்டு மாணிக்கவேலரை மணக்கும் அதிஷ்டத்தைப் பெற்ற அந்த அம்மையாரைப் பார்த்து 'மகிழ'த்தான் அம்பிகை இந்த உலகில்லையே!

பல ஆயிரம்பேர் சாகிறார்கள். அதற்குமதிகமானோர் பிறக்கிறார்கள். இதனால் எல்லாம் காலம் ஓடாமலா நின்று விடுகிறது? வருடங்களாக அது விதை போட்டுக்கொண்டே இருக்கின்றது.

"நன்றாக ஆங்கிலம் தெரிந்த சமையற்காரி தேவை"

"ஆங்கிலத்தில் எழுதப் படிக்கப் பேசத் தெரிந்த ஆயா தேவை"

"ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ள டிரைவர் தேவை"

இப்படியெல்லாம் மாணிக்கவேலரின் பெயரில் செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வந்துகொண்டே இருந்தன. தகுதியான பேர்வழிகள் கிடைக்காதபோதெல்லாம் "பாழாய்ப்போன தமிழ் நாடு; ஆங்கில வாசனையே அற்ற காட்டுமிராண்டி மக்கள்" என்ற கருத்துக்கள் பட அவர் அடிக்கடி திட்டிக்கொண்டே இருப்பார்.

* * *

மின்சார விளக்குகள் ஜெகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

மூன்றடிக்குமேல் உயரமானதும், மிகவும் விஸ்தீரணமானதுமான அந்த மேடைமீது எத்தனை ஆசனங்கள்; எத்தனை பிரமுகர்கள்!

ஒன்று, இரண்டு, மூன்று, என்று பலர் பேசிவிட்டார்கள். சமுத்திரம் போற் பரந்து கிடந்த மக்களின் முகங்களில் என்னும் சொன்னும் வெடித்துக் கொண்டிருந்தன. ஆத்திரத்துக்குக் கடிவாளம் போட்டுவிட்டு அவர்கள் இருந்தார்கள்.

கடைசிப் பேச்சாளர்! ஆம், அவர்கள்தான் மாணிக்கவேலர்! மக்களினால் ஆவலுடன் எதிர்பார்க்கப் பட்டவர்.

மாணிக்கவேலர் இலாகவமாக எழுந்து மார்பை நிமிர்த்தி ஏறுநடை போட்டுக் கொண்டே ஒலிபெருக்கி முன்னின்றதும் ஒரு தடவை அதனைச் சுண்டிப் பார்த்துக் கொண்டார். ஒலிபெருக்கி பக்குவமாக வேலை செய்கிறதா என்ற ஆராய்ச்சி அது.

கம்பளி போன்ற காற்சட்டை அணிந்திருந்தார். நீலநிற மேலங்கி அத்துடன் கழுத்தை இறுக்கிக் கட்டப்பட்ட பச்சைநிறப் பட்டி.

அநாயாசமாக ஒரு தடவை சனசமுத்திரத்தைப் பார்த்துவிட்டு இறுகக் கட்டியிருந்த கழுத்துப்பட்டியைத் தளர்த்திக் கொண்டார். அதற்கப்புறம் இலேசான கனைப்பு! கனைப்பு மட்டுமா? எத்தனை பீடிகை!

கடைசியில் மாணிக்கவேலரின் பொன்வாய் திறந்தேவிட்டது!

சம்பிரதாயப்படி வணக்கங்கள்!

"நானூர்தான் உலகமெல்லாம் சுற்றிவந்தேன். எத்தினையோவிதமான பாஷை பேசுகிறவர்களையெல்லாம் பார்த்திருக்கிறேன், எதனை பாஷையில் எத்தினைபேர் பேசினாலும் அவங்க எல்லாம் தமிழிலே தான் சிரிக்கிறாங்க. அப்பிடி இருக்கிறது தமிழின் செல்வாக்கு! ஏன் பயப்பிடவேண்டும்?

இதற்குமேல் அவரால்பேச முடியவில்லை; மக்கள் அவரைப் பேசவும் விடவில்லை.

சன சமுத்திரத்தின் ஒரே கலகலப்பு; ஒரே சிரிப்பு!

சிரிப்பு! ஐயோ! அதன் ஓசை — அதன் தன்மை வரவர மாறுகிறதே!

கேலிச்சிரிப்பு; எக்காளச் சிரிப்பு; கடைசியில் எல்லாமே கோபச் சிரிப்பு; தமிழ்ச்சிரிப்பு; ... ... ... அதற்கப்புறம் ... ... ... கடவுளே அந்த மேடை ...!

> இப் பத்திரிகையில் வெளியாகும் உருவகக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்கும் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

## தேகவியோகம்

### திருமதி லலிதாங்கி

கர்னாடக சங்கீதத்திற் சிறந்த ஞானம் படைத்து விளங்கிய திருமதி லலிதாங்கி அவர்கள் சென்னை, மைலாப்பூரிலுள்ள தமது புதல்வி திருமதி எம். எல். வசந்தகுமாரி அவர்களின் இல்லத்திற் சென்ற 26-9-55 இரவு மாரடைப்பினால் திடீரெனக் காலமாகிவிட்டார்கள். பிரபல இசைக் கலைஞர்கள் பலர் அம்மையாரின் இல்லத்திற்குச் சென்று தமது மரியாதையைச் செலுத்தியதுடன் அன்னாரின் மகள் திருமதி வசந்தகுமாரிக்கும் அவர்தம் கணவன் விகடம் கிருஷ்ணமூர்த்திக்கும் தமது அநுதாபத்தை தெரிவித்தனர். திருமதி லலிதாங்கி அவர்கள் மகாவித்துவான் ஸ்ரீ அய்யாச்சாமி அவர்களிடம் இசைபயின்று வெகுகாலம் இசைக்கச்சேரிகள் நடாத்தி வந்தார். புரந்தரதாஸரின் க்ருதிகளைத் தமிழ்நாட்டிற் பரப்பியவரும் இவரேயாவர். அம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைகளும் சூழலும் மாறிக்கொண்டே போகின்றன. இவற்றிற்கேற்ப நமது வழிபாட்டு முறைகளும் மாறுவிடில் அவை தாமாகவே சிதைந்துவிடும், சமயம் வாழ்வைப் பூரணப்படுத்த வேண்டுமேயன்றி அதனை விட்டுப்பிரிந்து நிற்றல்கூடாது. இரண்டையும் பிரிக்க முயல்பவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றுபவர்களாவர்.'

நம் நாட்டிலும் வீட்டிலும் ஆலயங்களிலும் நம் தாய்மொழியே தலையிடம்பெறவேண்டும் என்பதையும் ஆலயவழிபாட்டுமுறைகள் மாறவேண்டு மென்பதையும் கட்டுரைகள்மூலம் விளங்கிய பண்டிதர் இந்த ஆண்டு வேலணையில நடந்த திருமுறைவிழா வரவேற்புரையிலும் அதை வெளிப்படையாக பல்லாயிரம் மக்களுக்கு உணர்த்தினர். "நமது ஆலயங்களில் நடக்கும் அருச்சனை தமிழிலும் நடக்கவேண்டுமென்று பலர் உணர்கிறார்கள்; சிலர் உரைத்தும் வருகின்றார்கள். ஆனால் தலைமுறை தலைமுறையாக அடிமை வாழ்விலே தோய்ந்த காரணத்தால் இந்த உண்மையை உணரவும், உணர்ந்தாலும் அச்சமின்றி உரைக்கவும், பிறர் உரைத்தாலும் ஏற்றுக்கொள்ளவும் ஆற்றலின்றிச் சிலர் இருக்கிறார்கள்." தமிழில் அருச்சனை செய்தல் என்ற விடயத்திலும் பார்க்க முக்கியமாக பணம் கொடுத்து அருச்சனை செய்வித்தலை அவர் வன்மையாகக் கண்டித்தார். "பணம் கொடுத்து அருச்சனை செய்வித்தலால், அன்பையும் அருளையும் உண்டாக்க வேண்டிய வழிபாட்டு முறை ஒரு வியாபார முறையாக மாறிவிட்டது. வழிபடுவோரின் பண நிலைக்கேற்பக் கடவுள் அருளை விலைக்கு வாங்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது...... கடவுள் அருளை விலைகூறி விற்கும் சீட்டுக்கள் வாயிலாகவும், அருச்சனைக்குப் பெறும் பணம் வாயிலாகவும் கோயிலுக்குப் பொருளையீட்டுதல் பொருத்தமற்றதாகும்."

தமிழ் மொழியின் வளர்ச்சியில் இக்காலம் ஒரு மலர்ச்சிக்காலம், அடிமைப்பட்டு அடங்கி இருந்த மொழி பலதுறைகளிலே வளரவேண்டியிருக்கிறது. இவ் வளர்ச்சிக்குப் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியிற் பெயர்த்தல்வேண்டும். அப்படிக் கொண்டுவரும்போது பிறமொழிச் சொற்களை நம் மொழியில் எப்படிஎழுதவேண்டும்? இது தமிழறிஞர்களிடையேயும் எழுத்தாளர்களிடத்தும் தோன்றும ஒரு பெரிய சிக்கலே. இதற்கு இவர் கூறுவது இது: "பிறமொழிச்சொற்களைத் தமிழில் எழுதும்போதும்கூட ஒரு மரபைப்பின்பற்றி எழுதமுடியாமல் இருக்கிறது. August என்னுஞ்சொல்லை ஓகஸ்ற் என்றும், ஆக்கஸ்ட் என்றும், ஆகஸ்டு என்றும் இன்னும் பலவிதமாகவும் எழுதுகிறார்கள். டொக்டர், டாக்டர், டாக்குத்தர், டாக்ரர் இவையெல்லாம் Doctor என்னுஞ் சொல்லைக் குறிக்க வழங்கப்படுகின்றன. எழுதுவோரும் பேசுவோரும் விரும்பியபடி சொற்களை ஆளட்டும், காலஞ் செல்லச் செல்லப் பொருத்தமான சொற்கள் தாமாகவே நிலைத்துவிடும் என்று சிலர் கூறலாம். பிறநாட்டு மொழிகள் போல நமது மொழியும் வளர்ந்து சிறக்கவேண்டுமென்று கருதுபவர்கள் இக் கூற்றை ஏற்கமாட்டார்கள்." கவிகளின் கருத்தொற்றுமை, புத்தகப்பேய்களும் ஆகமசீலர்களும் என்ற கட்டுரைகளை மறுத்தும் சிலர் எழுதியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. காகுந்தனின் கன்னிப்போர் என்ற கட்டுரையை அவர் தனது வழக்கமான நடையை விட்டுவிட்டு தென்னிந்திய எழுத்தாளர் சிலரைப் பின்பற்றி மோனை எதுகையோடு எழுதியிருந்ததைக்கண்டு நான் ஆச்சரியமுற்றதுண்டு.

கட்டுரைகளேயல்லாமல் நாவலர் ஒரு சீர்திருத்தச் செல்வர், உள்ளத்துறையும் உத்தமர் (மகாத்மாகாந்தி) தமிழ்மரபு காத்த புலவர் (பண்டிதமணி கதிரேசச் செட்டியார்) பேராசிரியர் மூத்துசிவன், பழுத்த புலமைப் பசும்பொன் பாவலர் (நவநீத கிருஷ்ணபாரதியார்) தமிழ் முனிவர் திரு. வி. க, முத்தமிழ் பெரும்புலவர் விபுலாநந்தா என்ற பெருமக்களுக்கெல்லாம் தம் அஞ்சலியைத் செலுத்தியுள்ளார், இலக்கியம் படிப்பித்தல் சம்பந்தமாகவும் பாஷை கற்பித்தலைப்பற்றியும் எழுதிய கட்டுரைகள் ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்குப் பேருதவியாயுள்ளன. சாதாரண தமிழ் ஆசிரியராக வெளிவந்த இரத்தினம் அவர்கள் இடையறாத முயற்சியின் பேறாய் பண்டிதராய், ஆங்கில பட்டதாரியாய்த் திகழ்ந்து தற்போது 'மகாஜன' ஆங்கில ஆசிரிய கலாசாலையிற் கடமையாற்றுகிறார். அவர் முயற்சி தமிழ் இளைஞர்களுக்கு எப்போதும் வழிகாட்டக்கூடியதாகும் என்பதில் சந்தேகமில்லை, இப்போது பத்திரிகைத் துறையில் இருப்பவர்களும், தமிழ் எழுத்தாளர்களும் பிழையின்றி எழுதவோ பாடவோ முடியாதவர்கள என்பது பண்டிதரின் கருத்து. சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்பன மூலமாவது இக்குறையை நிவிர்த்திசெய்யலாம் எனப் பண்டிதர் எதிர்பார்ப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லையே. அவர்தம் முயற்சி வெல்க!

— கரவைக் கவி கந்தப்பனார்



## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 12048**

ஈவினை

1. மாணிக்கர் செல்லத்துரை
2. பெண் ஞானம்மா

வழக்காளிகள்

ஈவினை

1. பொன்னையா சின்னத்துரை
2. பெண் இராசம்மா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 12048ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள், 1955ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 3ஆந் திகதி (3-12-55) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல் வட்டி ரூபாய் 3783/ம் இதில் ரூபாய் 3250/க்கு 7-1?-54 திகதி தொடக்கம் 3-2-55 திகதி வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 218-35 சதமும்.

### காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகக் கோவிற்பற்று ஈவினை இறை "சோணப்புலம்" நிலப்பரப்பு 62உம் இணறும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை: கிழக்கு, ஒழுங்கையும் முருகர் சீனியருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, செல்லத்துரை பெண் தங்கமுத்துவுக்கும் மருபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, சின்னத்தம்பி பெண் செல்லத்திற்கும் மருபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, கந்தையா பெண் சின்னத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் நிலப்பரப்பு எட்டு (8உம்) குளி 2உம் குறித்த கிணற்றுக்கு மேற்கேயிருக்கும் வீடுகள் நித்தமாகவும்' ஐந்து தென்னைகளும், கிணற்றுக்குத் தெற்கே இரு பலா மரங்களும் ஆறு மாமரங்களும் நித்தமாகவும்.

2. மேற்படி ஈவினையிறை 'இம்புலன்', நிலப்பரப்பு 31உம் குளி 8உம் பனைகள் வடலிகளும். எல்லை: கிழக்கு, எம். கே. செல்லையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, கதிரிப்பிள்ளை செல்லையாவின் ஆதனம். மேற்கு, சிவசம்பு அழகநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, முருகர் சீனியருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை 23-10-1955
[A 243]



# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

## அத்தியாயம் 16

நடராஜன் காலையிற் கண் விழித்தபோது அன்றிரவு கண்ட கனவுதான் நினைவுக்கு வந்தது. அவன் மாமனார் வந்து "வா ஊருக்குப் போவோம்" என்று அழாக் குறையாகக் கூப்பிட்டதை எண்ணியபோது அவனுக்கு ஆத்திரந்தான் வந்தது.

மனத்துள்ளே இருக்கும் கதையைக் கோவைப்படுத்தி எழுத்துருபமாக கொண்டுவர முனையும் கதாசிரியனின் 'பிரசவ வேதனையோடு' அவன் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தான்.

வெளியே மருதானைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வந்த புகையிரதங்களின் கூவென்ற சப்தம் டிராம் வண்டிகளின் கணகணப்போடு கலந்து வந்து காதைப் பிளந்தது. அடுத்த அறையில் இருப்பவன் யாரென்று அறியாத பட்டணத்து நாகரீகத்தில், நடராஜனைப்பற்றிக் கவலைப்பட எவருமே இருக்கவில்லை. தியாகுவும் இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தான்.

யன்னலுக்கூடாகத் தெருவைப் பார்க்கையில் ஆண்களும் பெண்களும் அவசர அவசரமாகப் போய் வந்துகொண்டிந்தார்கள். இந்தப் பட்டினமே இப்படித்தான் எதிலும் ஓர் அவசரம்: வேகம் மனித நாகரீகத்தின் அளவுகோல் வேகந்தானே!

ஆனால் நடராஜன் மனம் மட்டிலும் மந்தமாகத்தான் இருந்தது. மேலே என்ன செய்வது என்பது அவனுக்குத் தெரியவில்லை. அறுபது எழுபதுபேர் அடைந்து கிடக்கும் அந்த விடுதியில் அவன் ஒரு அசாதாரணமான தனிமையில் நொந்துகொண்டிருந்தான்.

எட்டு மணியாகக்கூட ஆகிவிட்டது அப்போதுதான் தியாகு எழுந்தான். சோம்பர் முறித்துக்கொண்டே "இன்று வகுப்புக்குப் போகிறதில்லையா?" என்றான்.

"இன்றைக்குப் போகும் உத்தேசம் இல்லை எனக்கு. அலுப்பாக இருக்கிறது. சிறிது வேலையும் இருக்கிறது" என்றான்நடராஜன்.

"அப்படியா சற்று இரு, வருகிறேன்" என்றுகொண்டே தியாகு பற்பசையைத் தேய்த்தவாறு வெளியிற் போனான்.

நடராஜன் இந்தத் தனிமையைப் பயன்படுத்திக்கொண்டு தன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினான். தான் சுகமாகக் கொழும்பு வந்து சேர்ந்ததாகவும், சொல்லிக்கொள்ளாமற் புறப்பட்டுவந்ததைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கும்படியும் அந்தக் கடிதத்தில் எழுதினான். அந்தக் கடிதம் எழுதியபோது அவன் மனம் இலேசாகியதுபோல இருந்தது. ஆனால் அவன் மனம் உண்மையில் இலேசாகத்தான் ஆகிவிட்டதா? தாயார்மட்டும் கவலைப்படாமலிருந்தால் அவனுனுக்கு எந்தக் கவலையுமே இல்லை என்ற நிலைக்கு அவன் வந்துவிட்டானா?

பாலைவனத்து வியாபாரிகள் ஒட்டகத்தின்மீது பொதிகளைச் சுமத்துவார்களாம். பாரம் பொறுக்க மாட்டாமல் ஒட்டகம் படுத்துக்கொள்ளுமாம் உடனே வியாபாரிகள், ஏதாவது ஒரு சிறிய பொருளை அதன் முதுகிலிருந்து ஒட்டகத்தின் கண்ணுக்குத் தெரியும்படியாக எடுத்து விடுவார்களாம். தன் முதுகிலே பாரமே கிடையாது என்று எண்ணிக்கொண்டு ஒட்டகம் நடக்குமாம். அந்த ஒட்டகங்களில் ஒன்றைப் போலத்தான் தாயாருக்குக் கடிதம் எழுதிய உடனே தன் மனப்பாரம் குறைந்ததாகக் கற்பித்துக்கொண்டு, நடராஜனும் குளிக்கும் அறைப்பக்கமாக நடந்தான். மூட்டை தூக்கிப் பழக்கமானவன் தன்மேற் சுமையே இல்லை என்றவாறு கைவீசிக்கொண்டு நடப்பதுபோல மனத்தின் பாரத்தை இரண்டு மூன்று நாட்களாகச் சுமந்து பழகியபோது அவனுக்கு அதன் அழுத்தம் தெரியவில்லைப்போலும்!

குளித்துவிட்டுத் திரும்பியபோது அவன் கண்கள் எரிந்தன ஆனால் ஒரு உற்சாகம் உடலிலே ஏறிற்று. தன் உடைகளை அணிந்து தாயாருக்கு எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

புறப்பட்டவன் முன்னே தபாற்காரன்தான் நின்றான். விடுதி விலாசத்திற்கு வந்திருந்த எல்லாக் கடிதங்களையும் நடராஜனிடமே கொடுத்தான் தபாற்காரன்.

நடராஜன் கடிதங்களின் விலாசத்தைப் பார்வையிட்டான். அவனுககு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன.

மற்றக் கடிதங்களை எல்லாம், வழக்கமாகக் கடிதங்களை வைக்கும் மேசையின் மேல் பரப்பி வைத்துவிட்டுத்தன்னுடைய இரண்டு கடிதங்களையும் எடுத்துக்கொண்டு உறையைப் பார்த்தான். ஒன்று தன் தகப்பனாரின் கடிதம் என்று திட்டமாகத் தெரிந்தது. மற்றக் கடிதம் திருகோணமலையிலிருந்து அனுப்பப்பட்டிருந்தது. யார் அனுப்பினார்கள் என்று திட்டமாகத் தெரியவில்லை. அந்தக் கடிதத்தைப்பற்றி ஏதும் சிந்திக்காமலே தன் தகப்பனாரின் கடிதத்தைப் பரபரப்போடு பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

அவன் தந்தையார் எழுதியிருந்தார்:

அன்புள்ள தம்பி!

இங்கு நடந்த எல்லா விஷயங்களையும் அறிந்தேன். என் மனம் வேகின்றது. நீ என் மகன், தவமிருந்து நான் பெற்ற பிள்ளை. உன் மனம் நோவது என் உயிரே போவதுபோலத்தான்.

'மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும்' என்பது ஆன்றோர் வாக்கு. இனிமேல் ஆகுதல் உன் மானத்தையும், உன் உயிருக்கு உயிரான தந்தையின் மானத்தையும் காப்பாற்றிக்கொள்வாய் என்று நம்புகிறேன்.

இத்தோடு உன் மாமன் வீட்டு எல்லாப் பந்தபாசங்களையும் அறுத்துக்கொண்டாற்தான் நீ என் மகன். உன் அப்பா மரணப்படுக்கையிலிருந்துகொண்டு கெஞ்சிக் கேட்கும் ஒருவரமாக இதை நீ எண்ணிக்கொள்.

எனக்கு அதிகமாக எழுதத் தெரியாது. நீ ஏன் சொல்லாமல் ஓடிவந்துவிட்டாய்? இத்தோடு காசு நூறு ரூபாய் அனுப்பியிருக்கிறேன். பெற்றுக்கொண்டு எனக்குப் பதில் எழுது.

உனக்கு நல்ல புத்தியையும் திட சித்தத்தையும் நடராஜப்பெருமான் அருள்வாராக,

இப்படிக்கு,
உன் தந்தை,
அம்பலவாணர்.

கடிதத்தைப் படித்தபோது நடராஜனுக்கு அழுகையே வந்துவிட்டது. அவன் உடம்பு சிலிர்த்து உரோமங்கள் குத்திட்டு நின்றன. நரம்புக் குழாய்களிலே பனிக்கட்டி உருகி ஓடுவதுபோன்ற ஓர் உணர்ச்சி. அவனால் இருக்க முடியவில்லை. எழுந்து நிற்கவும் முடியவில்லை. ஓடவும் முடியவில்லை.

அவனுக்குத் தன் தந்தையாரின்மீது ஓர் அபாரமான மதிப்பு. எவருக்கும் தலைவணங்காத அவர் மனத்திண்மையும், கேட்டவர்களை மிரளப்பண்ணும் அவர் வெண்கலத் தொனியும், நெறிபிறழாத அவர் வாழ்வும் நடராஜன் மனதில் தந்தையாரை இலட்சிய புருஷனாகவே பதிய வைத்திருந்தன. அவர் எதற்காவது கலங்கியதை நடராஜன் தன் சீவியத்தில் இதுவரை காணவில்லை. யாரிடமும் எதற்காவது இரந்ததையும் அவன் காணவில்லை. அத்தகைய தன் தந்தை, தன்னிடம் பிச்சை கேட்பதுபோல எதையோ கேட்டிருப்பதை எண்ணியபோது அவன் சப்தநாடிகளுமே ஒடுங்கிவிட்டன!

சற்றுநேரம் அப்படியே இருந்தவன், திரும்பவும் தன் தந்தையாரின் கடிதத்தை எடுத்துப் படித்தான். தன் தந்தையாரின் வெண்கலக் குரல், இறல்

## கடமை

விழுந்த வெண்கலம்போல அலறியது; அவன் மனதைத் தொட்டது. என்றைக்குமே கலங்கி அறியாத அவர் திட்சண்யமான கண்கள் கலங்க, தன் தந்தையர் தன் காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "மகனே! என் மானத்தைக் காப்பாற்றடா" என்று கதறி அழுவதைப் போல இருந்தது. தந்தையாரின் கலக்கத்துக்குத் தான் காரணமாக இருந்தேனே என்றெண்ணியபோது அவன் கண்கள் மறுபடியும் கண்ணீர்குகுத்தன. "அப்பா! நானுங்களை இனிமேலும் கலங்கப்பண்ண மாட்டேன்" என்று அவன் அந்தராத்மாமுறையிட்டது.

மறுபடியும் கடிதத்தைப் படித்தான். தன் அப்பாவா இத்தனை குழைவாக எழுதியிருக்கிறார் என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரின் ஆண்மையைத் தான் கொன்றுவிட்டதாக எண்ணினான். மன உறுதியைக் குலைத்துவிட்டதாக எண்ணினான். தன்னால் அவர் மனிதத் தன்மைக்கே இழுக்கு வந்துவிட்டது என எண்ணினான்.

உடனே நடராஜன் தன் தந்தையாருக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

அன்புள்ள தந்தைக்கு;

தங்கள் கடிதமும் காசும் கிடைத்தன. தங்கள் மனதைத் துன்பப்படுத்தியதற்காக வருந்துகிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் இனிமேலும் தங்கள் மனம் என்னால் கலங்காது. ஆம்; என்னைப் பெற்றுவளர்த்த தங்கள்மீதாணை. இனி எந்தக்காரணத்துக்காகவும் நான் மாமனார் வீட்டில் அடியெடுத்துவைக்கமாட்டேன்.

எழுதிக்கொண்டிருந்த நடராஜன் மறுபடியும் சிந்தித்தான். அப்பா இதைத்தானா தன்னிடமிருந்து எதிர்பார்க்கிறார்? எல்லாப் பந்தபாசங்களையும் விட்டுவிடும்படியல்லவா கேட்கிறார். தான் கனகத்தைக்கூட விட்டுவிடத்தான் வேண்டுமா?

இப்படி எண்ணியபோது அவனால் மேலே கடிதத்தைத் தொடர முடியவில்லை. தந்தைக்காகப் பெற்ற தாயையே கொன்றுவிட்ட பரசுராமனைப் போல, அவனும் கனகத்தைக் கொல்லாமற் கொல்லவேண்டுமா? என்ற கேள்வி அவன் இதயத்தை அடைத்துக்கொண்டு நின்றது. "அத்தான்! யாருடையதோ குற்றத்திற்காக நானா தண்டிக்கப்படுவது?" என்று கனகம் கேட்டது அவன் நினைவில் அந்தகார இருளிற் பளிச்சிடும் மின்னலைப்போல நெளிந்தது. 'கனகம் சரியாகத்தானே இருக்கிறாள்' என்று தியாகு கேட்டது அவன் காதுகளில் ஒலித்தது.

நடராஜன் அடுத்த கடிதத்தின் ஞாபகம் வந்தவனாக, அதை விரித்துப் படித்தான். அவன்மனம் குமுறியது. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உடனே கடதாசி ஒன்றை எடுத்துக் கிறுகிறு என்று எழுதத் தொடங்கினான்.

## திவ்ய ஜீவன சங்கம்

### கண்டிக் கிளை

சென்ற 29-10-55 சனிக்கிழமை காலை கண்டி, தென்னக்கும்பா பிள்ளையார் கோவில் மடாலயத்தில், ஹிமாசல ரிஷிகேச திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகரும், தலைவருமான மஹா மண்டலேச்வர ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சரஸ்வதிசுவாமிகள் அவர்களுடைய ஆசியோடு, யோகிராஜ் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தா அவர்களின் தலைமையில் திவ்விய ஜீவன சங்கக் கிளை யொன்று ஆரம்பிக்கப்பட்டது.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918ஆம் ஆ. ஸ்தாபிதமானது**

**வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபா**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு 100 ரூபா திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதிசராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[A 235]

நகரசபை நடவடிக்கை : : 'ஈழகேசரி' சிறப்பு நிருபர்

# பொருளாதார நெருக்கடி

## உல்லாசபுரி இல்லையென்ற கவலை

## மூலையிலே தூங்கிக் கிடக்கும் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம்

பிரெஞ்சு நாட்டு மக்கள் பசி பட்டினியென்று துடித்துக்கொண்டிருக்கும்போது லூயி மன்னன் உலகத்துப் பேரழகிகளுடன் உல்லாச வாழ்வு நடத்தினான் என்று சரித்திரம் கூறுகிறது. பிரெஞ்சு மக்களின் கதி யாழ்ப்பாண நகரத்து மக்களுக்கும் ஏற்பட்டுவிட்டதோ என்று யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஆனால் நகரின் அத்தியாவசிய தேவைகள், அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றைக் குறித்து நகரசபை நிறைவேற்றிய தீர்மானங்கள் மட்டும் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத நிலையில், மூலையிலே தூங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் பொருளாதார நெருக்கடியென்பதை இங்கு குறிப்பிட்டால்தான் வாசகர்கள் தெரிந்துகொள்ள முடியுமென்று கருதுவது தவறு. சர்வம் பொருளாதார நெருக்கடி தாண்டவமாடும் இந்த நாட்டில் ஒரு நகரசபையை அது பீடிப்பது ஆச்சரியமானதில்லை.

ஆனால் வருமானத்தை அதிகரிக்க மார்க்கமென்னவென்பதை ஆலோசிப்பதற்குப் பதில்நகரை உல்லாசபுரியாக்குவதற்கு வழியென்னவென்று எந்த உறுப்பினராவது மூளையைப் போட்டுக் குழப்புவாரேயானால் அந்த உறுப்பினர்மீது அனுதாபம் தோன்றுவது இயற்கையானதேயாகும்

யாழ்ப்பாண நகரசபையின் சென்ற மாதாந்தக் கூட்டத்தின் போது (14-10-55) திரு ஜே. எஸ். சி. நிக்கலஸ் கொண்டுவந்த ஒரு பிரேரணை மேற்கண்டதுபோன்ற ஒரு சந்தேகம் கலந்த அனுதாப நிலையைத்தான் சபையில் உண்டாக்கியது.

மிகுந்த சிரமத்துடன் சிக்கல் நிறைந்த பிரேரணைகளையெல்லாம் ஒவ்வொரு கூட்டங்களிலும் கொண்டுவந்து அவற்றை அரங்கேற்றுவதில் அதிக கஷ்டப்படும் திரு நிக்கலசின் பார்வையில் இம்முறை நகருக்கப்பால் கடல் கடந்த ஒரு இடமாயிருக்குக்கும் சிறுத்தீவு அகப்பட்டுக் கொண்டது. பொது மக்களில் பெரும்பாலாருக்கு அதன் பெயர் இன்னதென்றே தெரியாதாகையால் அடிக்கடி தன் பெயர் கூட்டத்தில் அடிபட்டதைக் கேட்க அத்தீவு ஏதோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

குறித்த தீவை அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கோ அல்லது நன்கொடையாகவோ நகரசபை பெற்று அங்கு உல்லாசப் பிரயாணிகளின் பொழுதுபோக்குக்காக சிறிய வாடிவீடு, நீச்சல் தடாகம், திறந்த வெளி அரங்கம், நந்தவனம் என்பவற்றை அமைக்க வேண்டுமென்று திரு. நிக்கலஸ் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து தமிழும் ஆங்கிலமும் கலந்து கலப்பட மொழியில் பரிவுணர்ச்சியுடன் பேசினார். இக்காரியத்தைப் பொது நன்மைக்காகச் செய்யும்படி கேட்கிறேன் என்று கைகளை விரித்துக் கூறியதோடமையாது 'இப் பிரேரணையை எனது நண்பர் முத்துத்தம்பி ஆமோதிப்பார்' என்பதையும் சொல்லிவிட்டுத்தான் அமர்ந்தார். அவ்வாறே திரு. முத்துத்தம்பியும் எழுந்து ஆமோதித்துப் பேசுகையில் வெனிஸ் நகரம் போன்ற யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வாராதது குறித்துக் கவலையும் தெரிவித்தார்.

அப் பிரேரணையானது திரு. செ. ச. நவரத்தினத்தின் ஆணித்தரமான மறுப்புக்கு நின்றுபிடிக்கவில்லை. வாக்கெடுப்பு நடைபெற்றபோது திரு முத்துத்தம்பி மட்டுமே சாதகமாகக் கையை உயர்த்தினார். அப்படியானால் அதனைக்கொண்டு வந்த திரு நிக்கலஸ் கூட ஆதரிக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. மேயர் நினைவூட்டிய போதுதான் அவர் இலேசாகக் கையை உயர்த்தினாரென்றால் அது சபையில் சிரிப்பொலியைக் கிளப்பாமல் இருக்க முடியுமா?

மேயர் காதி எம். எம். சுல்தான் தலைமையில் நடந்த இக் கூட்டத்துக்கு ஹாஜி எம். அபுசாலியைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் யாவரும் வந்திருந்தார்கள். ஈச்சமோட்டையிலிருந்து வந்த ச. ச. நிலையம் சம்பந்தப்பட்ட ஒரு மனு குறித்து எழுந்த இலேசான கலகலப்புடன் கூட்டம் ஆரம்பமானது. எனினும் அன்று சுவையான நிகழ்ச்சிகள் அதிகமில்லாததால் சபையில் உற்சாகம் ஏற்படவில்லை. திரு. அல்பிரட் துரையப்பா இடையிடையே நகைச்சுவைமிக்க துணுக்குகளைச் சொல்லிக் கொண்டிருந்ததால் அந்தச் சோர்வு அவ்வளவாகத் தலைகாட்டவில்லை.

சமீபத்தில் யாழ்ப்பாண நகர பஸ் நிலையத்தில் நிகழ்ந்த அமளிதுமளியை ஒருவாறு சமாதானமானமுறையில் தீர்த்துவைப்பதில் மேயருக்கு அதிக அக்கறை ஏற்பட்டிருக்கவேண்டும். அவர் கூட்டத்தில் இடைமறித்துத் தான் சமரசப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கான அனுமதியைக் கோரினார். இது சம்பந்தமான அவசரப் பிரேரணையொன்று தொழிலாளர் நலனில் அக்கறையுடையவரென்று கருதப்படும் திரு. ஆ. துரைராசசிங்கத்தாலும் கொண்டுவரப் பட்டது. இதற்கான அதிகாரத்தைச் சபை ஏகோபித்து வழங்கியது.

சபை சுயமொழியில் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்பதில் திரு துரைராசசிங்கம் எத்தகைய ஆவலுடையவராகக் காணப்படுகிறாரென்பதை ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் இங்கு குறிப்பிடப்பட்டதை வாசகர்கள் மறந்திருக்கமுடியாது. இவ்விவகாரம் குறித்து அவர் சென்ற கூட்டத்திலேயே சமர்ப்பித்த விளக்கமான பிரேரணையை மீண்டும் பிரேரித்தபோது அதை ஆதரிப்பதிலும் பார்க்க அருக்குற்றம் பிடிப்பதிலேதான் ஒரு சிலர் அக்கறை காட்டினர். திரு. சி. மகாதேவா, பிரேரணையில் 'ரசீது' என்று ஒரு சொல் நுழைந்துவிட்டதேயென்று சுட்டிக்காட்டி அந்த இடத்திலே 'பற்றுச்சீட்டு' என்ற பதத்தைப் புகுத்தினர்.

உறுப்பினர்கள் பெரும்பாலும் தமிழ்மொழி நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதுபோலக் காட்டிக் கொள்கிறார்களே தவிரச் சந்தர்ப்பத்தில் அந்த ஆதரவைத்தர ஏனோ மறந்துவிடுகிறார்கள். திரு துரைராசசிங்கத்தை ஆதரித்து அவசியம் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட ஒருசிலர்கூட மௌனமாயிருந்தார்கள். இருப்பினும் எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்திற் பணம் ஒதுக்கியபின் தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமிப்பதென்ற நிதிக்குழுவின் சிபார்சு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அச் சிபார்சின்படி வரவுசெலவுத் திட்டத்தின்போது நிதி ஒதுக்கப்படுமா என்பது மிக முக்கியமான ஒரு கேள்வியாகும்.

சபையில் இத்தடவையும் இரு உறுப்பினர்களை வார்த்தைப் போராட்டத்தில் இறக்கிவிடுவதில் நெடுங்குளம் பிரசவ விடுதி கங்கணம்கட்டிக்கொண்டு நின்றது. அதன்மீது உரிமை பாராட்டி திரு மகாதேவாவும் கொழும்புத்துறை வட்டார உறுப்பினர் திரு நடராசாவும் வீராவேசமாகப் பேசினார்கள். இறுதியில் அது இப்போதுள்ள இடத்திலேயே தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற திரு நடராசாவின் பிரேரணைதான் ஆறு மேலதிக வெற்றி பெற்றது. முடிவைக் கண்டதும் திரு மகாதேவா உரத்த குரலில் ஏதோ சொல்லவே, அதைத் தொடர்ந்து மற்றும் ஒரு குரல் கர்ச்சித்தது.

தாராக்குளத்தைச் சேர்ந்த கற்குளம் என்ற இடத்தில் வீடமைப்புத்திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கத்திடம் ஒரு இலட்சம் ரூபாய் கடனெடுத்துக் கட்டவேண்டுமென்று திரு சி. முத்துத்தம்பி ஒரு முக்கியமான பிரேரணையைச் சமர்ப்பித்தார். அது நகரின் வீடில்லாச் சிக்கலை நீக்க அத்தியாவசியமானதென்பதை உறுப்பினர்கள் உணர்ந்திருந்தனரெனினும் நகரின் பொதுவான வீட்டுத் தேவையை முன்வைத்து திரு. எஸ். எஸ். நவரத்தினம் விளக்கம் கொடுத்தபோது பிரேரணையைக் கைவிடவேண்டியதாயிற்று. இருந்தாலும் அந்த இடத்தில் பொதுவாசிகசாலை, மலசலகூடம் ஆகியவை அமைப்பது பற்றிப் பின்னர் ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்போவதாகத் திரு. முத்துத்தம்பி கூறினார்.

மாநகர சட்டத்துக்கு அமைந்த துணைச்சட்டங்களையும், பிரமாணங்களையும் ஆக்க 5பேர் கொண்ட துணைக்குழு ஒன்றை நியமிக்குமாறும் சபைச் சட்டத்தைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமெனவும் திரு. முத்துத்தம்பி சமர்ப்பித்த பிரேரணைகள் எவ்வித விவாதத்துக்கும் இடமின்றிச் சம்பந்தப்பட்ட குழுக்களின் பரிசிலனைக்கு விடப்பட்டன.

சபை அன்று செய்த முடிவுகளில் மிக மிக முக்கியமானவையென்று கருதக்கூடியவை மத்திய நூல்நிலைய அமைப்பு, ஆனந்தக் குமாரசாமியின் நூல்களை வாங்குவது என்பன பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களேயாகும். ஏற்கனவே உள்ள மாதிரி அமைப்பின்படி நூல்நிலையத்தைக் கட்டுவதென்று நூல்நிலையக் குழு செய்த சிபார்சைச் சபை ஏற்றுக்கொண்டமை அதில் அக்கறையுடைய அத்தனை பேரினதும் கவலையைப் போக்கியது.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

லின்றி இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் ஒற்றுமையாக இருந்திருக்கிறார்கள்; இதை யாரும் மறுக்கமுடியுமா? இன்னும் சிங்கள மன்னர்கள் பலர் தமிழில் ஆட்சிசெய்துமிருக்கிறார்கள். தமிழ் மன்னர்கள் பலர் சிங்களத்தில் ஆட்சி செய்துள்ளனர். இதைவிட வேறு என்ன வேண்டும்? ஆங்கிலமென்ற அந்நிய மொழி எங்கள் மத்தியிற் புகுந்து கொட்டமடித்தபோது எழாத இந்தச் சிக்கல் இன்றுமட்டும் ஏன் எழவேண்டும்? வகுப்புவாதிகளே இதற்கெல்லாம் கால். இலங்கை மக்கள் இதைப்பற்றிக் கலங்காது உண்மை நிலையை ஆராய வேண்டும்.

■

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சிங்கை நகரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 'கணேச பலகலைப் பயிற்சிக் கழகக் கூட்டத்தில்' யாழ்ப்பாணத் தமிழரசும் தலைநகரமும் என்பது பற்றி யான் பேசிய குறிப்பு 'ஈழகேசரி' 4-9-55 இதழில் வெளியாகியுள்ளது. இது நல்லூரில் இருந்த 'சிங்க நகரம்' என்னும் தலைப்பில் வெளிவந்திருக்கின்றது. இங்கே அச்சுப்பிழையோ பிரதி பேதமோ அறியோம் சிங்கை நகரம் என்றிருக்கவேண்டியது சிங்க நகரம் என்று வெளியாகியிருக்கின்றது. யான் நல்லூரில் இருந்த சிங்கை நகரம் என்று பேசினேனேயன்றி சிங்க நகரம் என்று பேசவில்லை. அதாவது அந்நகரத்தின் பெயர் சிங்கை என்பதேயன்றி சிங்க என்பது அல்ல. ஆகையால் நல்லூரில் இருந்த சிங்கை நகரம் என்றிருப்பதே சரி. அத்துடன் அக்குறிப்பினைச் சிறிது விளக்க விரும்புகின்றேன்.

இலங்கையின் வடபாகமாகிய இவ் யாழ்ப்பாணத்திலே முன்னொருகாலம் தமிழ் இராச்சியமும், தமிழ் அரசும், தலைநகரும் இருந்ததென்னும் உண்மையை வரலாற்று நூலோர் யாவரும் ஒப்ப முடிந்ததே. ஆனால் அத்தலைநகரம் இருந்த இடம் இவ் யாழ்ப்பாணத்தில் எவ்விடம் என்பதுதான் முக்கியமானதொரு ஆராய்ச்சி. கி. பி. 1242ஆம் ஆண்டு தொடங்கி கி. பி. 1450 ஆம் ஆண்டு வரை ஒரு தலைநகரம் இருந்ததென்றும், அது பருத்தித்துறைக் கணித்தாயுள்ள வல்லிபுரம் என்னும் இடத்தில் இருந்ததென்றும், அதன் பெயர் சிங்கை நகரமென்றும், அது முன்னதென்றும் கி. பி. 1450ஆம் ஆண்டு தொடங்கி கி. பி. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை — அதாவது போர்த்துக்கேயரின் ஆட்சி ஆரம்பம் வரை (போர்த்துக்கேயருடன் பொருதிய சங்கிலி அரசனின் ஆட்சியுட்பட) அத்தலைநகரம் நல்லூரில் இருந்ததென்றும் அதுதான் நல்லூர் நகரம் என்றும், அது பின்னதென்றும்தான் இன்றைவரை இத்தமிழ்த் தலைநகரைப்பற்றி மக்கள் அறிந்துள்ள அறிவு. ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து சொல்லிய முடிபு. [யா, வை. வி; Ancient Jaffna] இவ் வாதம் எமக்குச் சம்மதமில்லை. (கி. பி. 1944ஆம் ஆண்டில் யாம் வெளியிட்ட 'அடியார்க்கு நல்லார் வரலாற்றாராய்ச்சி' நூன்முகத்திலும் அதன் படக்குறிப்பிலும் இம் முடிபின் பிழைபாட்டைக் குறிப்பிட்டுள்ளோம்) கி. பி. 1450ஆம் ஆண்டு தொடங்கியல்ல; அதற்கு முற்பட்ட கி. பி. 1242ஆம் ஆண்டு தொடங்கியே கி. பி. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை அக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய தமிழரசனான சங்கிலியின் காலம்வரை — அதாவது போர்த்துக்கேயரின் ஆட்சி ஆரம்பம்வரை — அத்தலைநகரம் நல்லூரில்தான் இருந்ததென்றும்; நல்லூரில் இருந்த தலைநகர்க்குத்தான் சிங்கைநகர், மறுபெயர் என்றும், நல்லூரில் இருந்த காரணத்தால் நல்லூர் நகர் என்று சொல்லப்படுகின்றது. அவ் வல்லிபுரத்துக்குகிலே அப்படி ஒருசிங்கைநகர் இருந்திருக்கவில்லையென்றும் (அது என்ன நகர் என்று பின்னர் சொல்லுவாம்) நாம் இன்றும் சொல்லுகின்றோம். (1944 ஆம் ஆண்டில் சொல்லத் தொடங்கிவிட்டோம்) இது அவர்கள் (வல்லிபுரத்திலே சிங்கை நகரைக் கண்டவர்கள்) சொல்லுகின்ற மாதிரி ஐயப்பாதையும் ஊகப்பாதையும் பின்பற்றிக் கண்டதல்ல.

பொ. செகந்நாதன்
வேலணை

## நபி பிறந்தனரே!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெய்யிலிலே நிழலாக, பவநோய்க்கு மருந்தாக, பயிருக்கு செழுமழையாக, குறைஷி குலத்திற்கே திலகமாக, மாநிலத்திற்கொரு மணிவிளக்காக, ஒரு பாட்டிலே இவ்வளவு நயமிகு உவமைகளின்மூலம்நாயகத்தின் சிறப்பை விளக்குகிறார்புலவர்:

பானுவின் கதிரா
விடகுறுங் காலம்
படர்தரு தருநிழ லெனவாய்
ஈனமும் கொலையும்
விளைத்திடும் பவநோய்
இடர்தவிர்த்
திடுமரு மருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர்
செழுமழை யெனலாய்
குறைஷியர்திலகமேனலாய்
மானிலந் தனக்கோர்
மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

பெருமானாரவர்களின் சிறப்புப் பற்றிய இப்பாக்களில் உண்மையாகவே அவரது இலட்சியங்களையெல்லாம், அவர் ஏன் உலகிற் பிறந்தாரோ, அவற்றையெல்லாம், அழகுறக் கற்பனை நயத்தோடு கூறிவிடுகிறார் புலவர். பெருமானாரின புகழ் பேசுவதுமட்டும் பெருமை தாராது. மெய்ஞ்ஞானச் செஞ்சுடர் மேதினியிலிட்டுச் சென்ற அறிவுச் செல்வங்களை நம் வாழ்க்கையில் பரிணமிக்கச்செய்யவேண்டும்.



# பாலர் பகுதி

அருமையான மருமக்களே!

தீபாவளித் திருநாள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. மருமக்கள் இப் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு உற்சாகமூட்டவேண்டுமென்ற ஆசையுடன்தான் போட்டி ஒன்றை ஏற்படுத்தியிருந்தேன். எனது மருமக்கள் இதில் மிகுந்த உவகையுடன் பங்குபற்றி வருவதைக் கண்டு ஆனந்தமடைகின்றேன். போட்டிக்கான கட்டுரைகள் ஒவ்வொருநாளும் கிடைத்து வருகின்றன. முடிவு திகதி 15-11-55 என்பதை மறந்துபோகவேண்டாம்.

எனது மருமக்கள் பலர் அரசியற் கட்டுரைகள் எழுதி அனுப்புகின்றனர். போதிய அறிவு பெருமல் அரசியல் விஷயங்களில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது. அரசியலைப்பற்றியும் அரசியற் கட்சிகளைப்பற்றியும் அறிந்திருத்தல் நல்லதுதான். ஆனால் கட்சிப்பற்றுடன் அரசியல் விஷயங்களை இந்த வயதில் ஆராய்தல் நல்லதல்ல. ஆனபடியால் வயதுவரும் வரையும் பொறுமையுடன் இருக்குமாறு எனது மருமக்களுக்குப் புத்திமதி கூறுகின்றேன்.

கேசரி மாமா

## மருமக்கள் போட்டி

### 2 பரிசுகள்

இனி சொன்ன கதை என்ற தலைப்பில் மருமக்கள் ஒவ்வொருவரும் ஒரு கதை எழுதி அனுப்ப வேண்டும்.

ஒற்றை 'றூல்' அப்பியாசக் கொப்பிக் கடதாசியின் 3 பக்கங்களுக்குக் குறையாமலும் 4 பக்கங்களுக்குக் கூடாமலும் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதியனுப்பவேண்டும்.

ஈழகேசரி பாலர் பகுதி அங்கத்தவர்களுக்கு மாத்திரம் இப் போட்டியிற் கலந்துகொள்ளும் உரிமையுண்டு. இப்பக்கத்திலுள்ள போட்டிப் பத்திரத்தை நிரப்பிக் கதையுடன் அனுப்பவேண்டும். பின்வருமாறு விலாசமிடப்படவேண்டும்:

| | |
|---|---|
| போட்டி முடிவு திகதி<br>**15-11-55** | மருமக்கள் போட்டி<br>கேசரி மாமா<br>ஈழகேசரி நிலையம்<br>சுன்னாகம் |

## நரியின் யுக்தி

பொ. சற்குணானந்தம் (1079)

ஒரு நாள் ஒரு பூனை கடைக்காரன் ஒருவன் ஏமாந்திருக்கும் சமயம் பார்த்து ஒரு ரொட்டியைத் திருடிக் கொண்டு போனது. அதை ஒரு நரி அபகரிக்க எண்ணிப் "பூனையாரே எங்கே அவசரமாய் ஓடுகின்றீர்', என்றது. பூனை அதற்குப் பதில் சொல்ல வாய் திறந்ததும், ரொட்டி கீழே விழுந்தது. உடனே நரி அதை எடுத்துக் கொண்டது. அதைக்கண்ட பூனை, நரியைப் பார்த்து "நரியாரே அந்த ரொட்டியை எடுக்க உமக்கு யார் உத்தரவு கொடுத்தது?" என்றது. அதற்கு நரி ரொட்டியைக் கீழே வைத்துத் தன் முன்னங்கால்களால் மிதித்துக்கொண்டு "பூனையாரே இந்த ரொட்டியை எடுக்க உமக்கு உத்தரவு கொடுத்தது யார்? என்றது. அதற்குப் பூனை பதில் சொல்ல மாட்டாமல் வந்த வழியே போய் விட்டது.

## புதிய மருமக்கள்

க. ஜெயபாலசிங்கம் (1347) C/o க.வி. கணபதிப்பிள்ளை செயலாளர் கிராமச்சங்கம் உடுவில்.

யோ. எட்வேட் (1348) 12 மாட்டின் ரோட், யாழ்ப்பாணம்.

க. ரவீந்திரன் (1349) ராச தோப்பு, சாவகச்சேரி

இ. சந்திரன் (1350) ஆவரங்கால்மேற்கு, புத்தூர்.

மா. தனையசிங்கம் (1351) நாரந்தனை, ஊர்காவற்றுறை.

வ. இரட்டாஸ் (1352) C/o ந. வயிரமுத்து காரைநகர் வடக்கு வலந்தலை, காரைநகர்.

செ. அந்தோனி எலியாஸ் (1353) சி. த. க. பாடசாலை, பூண்டுலோயா.

பொ. துரைரத்தினம் (1354) 4. வைமன் ரோட் நல்லூர், யாழ்ப்பாணம்.

கு. வைத்தீஸ்வரக்குருக்கள் (1355) விருத்தகிரீசன், அச்சுவேலி.

## கவனிக்கவும்

ஈழகேசரி பாலர் பகுதியில் 6 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், 19 வயதுக்குட்பட்டவர்களாயும் உள்ள சகலரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் இங்கு வெளியாகியுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்.

## 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு'

பொ. சிங்கராஜா (988)

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் பொன்மொழி இந்த இலங்கைக்கு மாத்திரம் அல்ல உலகம் முழுவதுக்குமே பொருந்தும்.

மக்களாகிய நாம் ஒற்றுமையாக வாழவேண்டும். நாங்கள் சில காரியங்களைச் செய்யத் தொடங்குமுன் பலருடன் யோசித்துச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யாவிட்டாற் செய்ய முற்பட்ட காரியம் நிறைவேருது.

சிறுவர்களாகிய நாம் பல நண்பர்களோடு விளையாடும்போதும் ஒன்றுகூடியே விளையாடவேண்டும். இப்படி இணைந்து விளையாடினுல் நம் வாழ்க்கையிலேயும் ஒற்றுமையாக வாழலாம்.

### விண்ணப்பப் பத்திரம்

**ஈழகேசரி — பாலர் பகுதி**

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னாகம்.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி—பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

பிறந்த திகதி ____________________

____________________

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

## சொல்வதைக் கேள்

—குகன்—

நல்ல சின்னத் தம்பியே
சொல்வ தைக்கேள் நம்பியே

தந்தை தாயர் சொற்படி
சிந்தை வைத்து நீபடி

பொய்ம்மை தன்னை நீக்கிடு
மெய்ம்மை மேன்மை ஆக்கிடும்

களவு சூது கைவிடு
பிறருக் குதவி செய்திடு

தினமும் இறையை வணங்குவாய்
நல்லா ரோடு இணங்குவாய்

குருவை மதித்து ஒழுகிடு
குறையி லிருந்து நழுவிடு

பெரியார் தம்மைப் போற்றிவாழ்
பெற்ருர் நாமம் ஏற்றிவாழ்

## உங்களுக்குத் தெரியுமா?

—த. யோகநாதன் —

592. அமெரிக்க சீமான் சீமாட்டிகளுக்குத் தங்கள் பிள்ளைகளிலும் பார்க்க எதில் அதிக மோகம்?

593. காந்தத்தின் குணத்தையும் அதன் உபயோகத்தையும் முதல்முதல் அறிந்தவர் யார்?

594. திரிபிடகம் என்ற புத்தாகமத்தில் அடங்கியுள்ளவை எவை?

595. பத்துப் பாட்டுகள் அமைந்துள்ள நெடுநல் வாடையை இயற்றிய புலவர் யார்?

596. உலகப் பிரசித்தி வாய்ந்த பருத்தி ஆலைகள் அமைக்கப்பட்டிருக்கும், போலாந்திலுள்ள லட்ஸ் நகருக்கு வழங்கப்பெறும் மறுபெயரென்ன?

597. அணுக்கதிரியக்கத்தைத் தடுக்கக்கூடிய அபார சக்தி ஒரு சாதாரண பொருளுக்கு உண்டு. அது எது?

598. ஜயவர்த்தன புரி என அழைக்கப்பட்ட கோட்டைக்காட்டைக் கட்டியவன் யார்?

599. கைகேயியின் தோழியாகிய கூனியின் நாமந் தாங்கிய வேறு பெண் யார்?

600. சமையலுக்குவேண்டிய புளியை மீன்கடையிலும். உப்பைக் கய்கறிக் கடையிலும் போய் வாங்கும் வழக்கம் எந்த நாட்டில் உண்டு?

[விடைகள் 12ஆம் பக்கம் பார்க்க]

## மாமா மறுமொழி

அ. அ. மஹ்மூது (1298) பெரியார் லியாகத் அலிகான் அவர்களைப்பற்றி நன்ருக எழுதியிருக்கின்றீர். கட்டுரையைச் சுருக்கியிருக்கலாம்.

ம. ஸ்ரீஸ்கந்ததேவி (1227) இன்பததமிழ மொழியைப் பற்றி இதமாக எழுதியிருக்கின்றீர். அதனை வெளியிடுவேன்.

க. நாகேந்திரம் (1316) பெற்றதாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே எனப் பாரதியார் பாடியிருக்கின்ருர். 'எனது தாய் நாடு' என்ற உமது கட்டுரையை வாசித்தபோது மேற் கூறிய பாடல் அடிகள் என் நினைவுக்கு வந்தன.

இ. சந்திரராசா (1292) ருஷியப் பேரறிஞர் 'ரோல்ஸ் ரோய்' அவர்களைப் பற்றி அழகாக எழுதியிருக்கின்றீர்.

க. காந்தமலர் (1309) உமது கனவு நல்ல முறையில் அமைந்துள்ளது.

பொ. சிங்கராசா (983) உமது சின்னஞ்சிறிய கட்டுரை எனக்கு மகிழ்ச்சியை ஊட்டிற்று!

பா. மகாதேவா (937) வேறொரு கட்டுரை எழுதி அனுப்பவும்.

பொ.சற்குணானந்தம் (1079) மருமகனே! நல்ல கதை ஒன்று எழுதி விட்டீரே! உமது யுக்தியே யுக்தி.

பவுல் நவராஸ் காந்தன் (1310) உமது கட்டுரைகள் உபயோகமானவை 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என்ற கட்டுரையை வெளியிடுவேன்.

### மருமக்கள் போட்டிப் பத்திரம்

பதிவு இலக்கம்..................

பெயர்..........................................

விலாசம்..........................................

..........................................

வயது...............

..........................................

பெற்ருர் அல்லது ஆசிரியரின் ஒப்பம்

T'Phone No. 805

Registered at the G. P. O. as a Newspaper

26TH YEAR OF PUBLICATION

# EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY

Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore

Founder: N. PONNIAH

Vol. 26 | Chunnakam Sunday, Nov. 6, 1955 | No. 18

## அப்துர் றஹுமான் ஆலிம் புலவர்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொற்கள் புலர்கொள வைக்க் காணலாகும்'

இளமையின் அழகும் உருவும் பொலிந்து தோன்றிய நபி மகளார் திருமணக் கோலம் புனையப்பெற்றிருந்த நல்லழகு புலவர் வாயிலாகப் பின்வரும் பாடல்களில் மேலும் இடம் பெற்று விளங்குகின்றன:-

'கோடிக் கதிரிறைக்கும்
கோதையினை அம்மடவார்
சோடித் தலங்கரித்துத்
துய்ய பணிபூட்டி
ஆடிக் குலவிவரு
மன்னமென்றே முத்தமிட்டு
நாடிக் கரமணைத்து
நாரியர்கள் போற்றுவரே''
''போற்றுவார் புகழ்வார்
தங்கப்
பொருளிதோ விலையோ
வென்பார்
கீற்றிளம் பிறையோ தங்கக்
கிரீடமோ வலது
வெய்யோன்
மாற்றிய சுடரோ பஞ்ச
வண்ணநற்*சுகமோ
யாவுந்
தோற்றிடும் அனமோ
யாதோ
சொல்லுவீர் எமக்
கென்பாரே''
(*சுகம்-கிளி)

''கோடிக் கதிரிறைக்கும் கோதை'' என்ற தொடர் அம் மெல்லியலுடைய இயற்கை வழகினை உயர்வின் எல்லையில் நின்று விளக்குவது. திருமணக் கோலம் புனையப்பெற்ற அன்னாருடைய நல்லெழிலைக் கண்டு பெண்களே கூறும் வியப்பு மொழிகள் கொண்டவை மற்றைய தொடர்கள். இவ்வாறான பாடல்கள் நிறைந்த இந் நூலிலே சீறாப் புராணத்தில் உள்ள பாத்திமா நாயகியாரது திருமணப் படலத்தின் சாயை படரப்பெற்றிருத்தல் புலப்படுகின்றது.

தூய மனவெழுச்சியினையும் பக்தி நினைவினையும் எழுப்ப வல்ல இந்நூல் வெண்பா ஆசிரியப்பா, விருத்தம் என்பவற்றோடு பலவகைச் சிந்துகளும், கீர்த்தனை வகைகளும் விரவப் பெற்றுள்ளது. மட்டக்களப் பெங்கும் நாட்டுக்கூத்திசை ஒலித்த காலம் புலவர் வாழப் பெற்றது. இராகதானத்தோடமைந்த கூத்துப் பாடல்களையும் அவை போன்றவற்றையும் முஸ்லிம்களும் விரும்பிப் படிப்பதுண்டு. மக்களின் அந்த இசை விருப்பினைப் பயன் கொண்டு அவர்களின் நல்வரவேற்பினோடு புலவர் இந்நூலை ஆக்கி அளித்தார் எனல்வேண்டும். பாத்திமா நாயகியின் திருமணத்திற்காக முஹாஜிரீன் என்னும் அரசன் தன் நகரினை அலங்கரிக்கச் சொல்வதாயமைந்த சிந்துப் பாடலொன்றின் அடிகள் இவை:-

''வச்சிரத் தோரணம்
நாட்டுங்கோ—நல்ல
வாழைமரக்குலை
தூக்குங்கோ
மெச்சுநல் வீதி இலங்கிட
—நீங்கள்
மேன்மை யணிபந்தல்
போடுங்கோ''
ஏழை *எத்தீம்களைக்
கூட்டுங்கோ—நல்ல
இயல்பான பால்தயி
ரூட்டுங்கோ
வாழைக்கனியுடன்
மாதுளை—இன்ப
வருக்கைப் பலாக்கனி
ஊட்டுங்கோ''
(*எத்தீம்கள்—அநாதைகள்)

இத்தகைய இனிய சிந்துகள் பலவும் ஆநந்த பைரவி முதலான இராகங்களோடு பாடுதற்கமைந்தனவுமான பல பாட்டுகள் நூலினை நிரப்பி அழகு செய்வன.

இந்நூல் இனிது நிறைவுறுதற்கு வேண்டிய பொருள் வளம் செய்து, புலவரது கவிதைச் சிறப்பு மங்காது அவரைப் பேணிய பெருந்தகையானர் அக்கரைப்பற்று மருமூதுப் போடி என்பார். புலவரது கவிதைப் பண்புள்ளமும் அப்பெரியார் செய்த நன்றியை மறந்திலது. இதனால் மருதுப் போடியினுடைய பெயரும் செய்யுள்களில் அங்கங்கே நிலையாகப் பொறிக்கப்படலாயிற்று.

''வண்டாடு மார்பன்
மருமூதுப் போடி வள்ளல்''

என்பது முதலாகப் பல இடங்களிலே ஆலிம் அவர்கள் இக் கொடையாளியின் பெயரைத் தம் நூலிற் பாடிப் போற்றியுள்ளார். சிறந்த இந்நூலும் அன்னார் முயற்சியினால் அக்கரைப்பற்றிலே நல்லரங்கேற்றம் பெறுவதாயிற்று. எனினும் இன்றுவரை அச்சேறப் பெறாது கிடப்பதால் பிழைகள் மலிந்த கையெழுத்துப் பிரதிகளே அங்கங்குக் கிடைக்கின்றன. மக்கள் நாவிலே கேள்வி வாயிலாகப் படிந்து பார்ந்து வாழுகின்றன இவர் பாக்கள். இவைகளை அச்சேறச் செய்து பயன் கொள்வது முஸ்லிம் மக்களினதும் தமிழ்மக்களினதும் பெருங் கடமையாகும்.

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா:

இலங்கை-இந்தியா ரூ.6 00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி ச. 10. காசு 10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரையூர்
சுவாம்பிள்ளை மகள் எலிசபேத்து இராசம்மா
வழக்காளி

பண்டியதாழ்வு
பொன்னம்பலம் சின்னத்தம்பியும் பெண் ஜெயமணியும்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின 1136ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1955ஆம் வரு மார்கழி மீ 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**—முதல் வட்டி ரூபாய் 2320/ம் 13-9-54 தொடக்கம் 4-4-55 வரைக்கும் ரூபாய் 2000/க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய்209-47 இதில் ரூபாய் 125 கொடுபட்டது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை ''ஆலடி யிலுப்புலமும் ஆலடியில் வளவும்'' நிலப்பரப்பு 2½ம் வீடும், பயிர்வகைகளும், மற்றும் அதைச்சேர்ந்தவைகளும் கிழக்கெல்லையிலிருக்கும் ஒழுங்கைப்பங்கும், எல்லை: கிழக்கு ஒழுங்கை, வடக்கு கந்தர் சிமாம்பிள்ளையின் ஆதனம், மேற்கு முருகர் சுந்தரம்பிள்ளையின ஆதனம். தெற்கு கே. இரத்தினத்தின் ஆதனம் இதடங்களும்.

S. Ambalavanar
Commissioner & Valuer
19, Vambadi Road
Jaffna, 19-10-55 [A 241]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11058

யாழ்ப்பாணம் சப்பல் வீதி
1. தில்லையம்பலம் முத்துக்குமாரு
2. பெண் தங்கரத்தினம்
வழக்காளிகள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ரோட்டு
1. சின்னத்தம்பி காராளசிங்கம்
2. பெண் ஞானம்மா
திருநெல்வேலி பழம் ரோட்
3. எஸ். முத்தையா
4. பெண் தையல்முத்து
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 11058 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1955ஆம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 19ஆந் திகதி (19-11-55) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**—முதல் வட்டி ரூபாய் 3960/-உம், இதில் ரூபாய் 3000/-க்கு 30-4-54 திகதி தொடக்கம் 31-8-54 திகதி வரைக்கும் 100-க்கு 8வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 229-75 சதமும்.

**காணியின் விபரம்**


வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரமிறை ''பதிரைக் கலட்டி'' நிலப்பரப்பு 48. இது உலாந்தா எம். அலோசெஸ்சால் 20-8-1945 இல் 1094ஆம் இலக்கப் படத்தில் விக்தாரிக்கப்பட்டது. உறுதிப்படி, நிலப்பரப்பு 47. இதில் மேற்குப் பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு 3½ குளி 3. இதில் மேற்கே நிலப்பரப்பு 18உம் குளி 3உம், குறித்த நிலப்பரப்பு 33 குளி 3இல் கிழக்குப் பக்கமாக 10-5-1948 இல் பிரசித்த நொத்தாரிஸ் யே. எஸ். பொன்னம்பலத்தால் 631ஆம் இலக்கத்தில் அறுதியாக எழுதப்பட்ட நிலப்பரப்பு 5 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 28 குளி 3. இதில் குறித்த வழக்காளிகளுக்குக் கிழக்குப் பக்கமாக மேலே குறிக்கப்பட்ட நொத்தாரிஸ் முகதாவில் 1-8-49 இல் 1285 ஆம் இலக்கத்தில் நிலப்பரப்பு 10 அறுதி நீக்கி, இது உலாந்தா வி. ஆறுமுகத்தால் 2-3-1948 இல் 633ஆம் இலக்கப் படத்தில் 2ஆம் துண்டாகவும் மிகுதி நிலப்பரப்பு 18 குளி 3உம் முதலாந் துண்டாகவும் இந்த நிலப்பரப்பு 18 குளி 3க்கு எல்லை கிழக்கு, தில்லையம்பலம் முத்துக்குமாருவுக்கும் பெண் தங்கரத்தினத்திற்கும் குறித்த வழக்காளிகளுக்குமுரிய ஆதனம், வடக்கு, கீரிமலை—காங்கேசன் துறை ரோட்டு, மேற்கு, என் வயித்தியலிங்கத்தின் ஆதனம், தெற்கு, சுப்பிரமணியம் கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும். முற்பதிவு H 2252/244.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 28-9-1955
[A 242]

## விடைகள்

592. வாய்.
593. சினர்.
594. சுத்திரபிடகம், வினயபிடகம், அபிதர்ம பிடகம்.
595. நக்கீரர்.
596. மிளிரும் மான்செஸ்டர்.
597. உமி.
598. அழகேஸ்வரன்
599. மாதவியின் தோழி வசந்தமாலை.
600. தாய்லாந்து.




இப் பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — இரும்பசிட்டி, முத்தையா — சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு நவம்பர்மீ 6ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது